# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி: 1, கதிர்: 30-31 | சென்னை திருவள்ளுவர் ஆண்டு. 1992, புரட்டாசி 13 வெள்ளி | விலை 16 காசு

அன்புக்கோர் அண்ணன்   பண்புக்கோர் சின்னம்




29.9.61.

# தென்மொழிப் பாடம் 2

## நான்கு மொழி நெடுங் கணக்கு

தென் மொழிகள் ஐந்தானாலும் எழுத்து வடிவுடைய மொழிகள் முக்கிய மொழிகளில் சேர்க்கப்பட்ட நான்குமே. அறப்போர் தரும் மொழிப் பாடங்களும் இந்த நான்கு மொழிப் பாடங்களே.

நான்கு மொழிகளின் நெடுங்கணக்கு எழுத்துக்களும் ஒப்புமைக்காகவும் ஒலி ஒப்பீட்டுக்காகவும் தமிழகம் சமஸ்கிருத வகையில் வழங்கிய கிரந்தம், வட திசையில் சமஸ்கிருதம் இந்தி முதலிய மொழிகளில் வழங்கும் தேவநாகரி, ஆங்கில ஒலிக் குறிப்புக்ள் ஆகியவையும் ஆக ஒன்பது உருக்களில் நான்கு மட்டும் ௲வ்வாரம் கீழே தரப்படுகின்றன

| பட்டியல் எண் | தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|---|
| 1 | அ | അ | అ | ಅ |
| 2 | ஆ | ആ | ఆ | ಆ |
| 3 | இ | ഇ | ఇ | ಇ |
| 4 | ஈ (ஈ) | ഈ (ഈ) | ఈ | ಈ |
| 5 | உ | ഉ | ఉ | ಉ |
| 6 | ஊ | ഊ | ఊ | ಊ |
| 7 | × | ഋ | ఋ | ಋ |
| 8 | × | ൠ | ౠ | ೠ |
| 9 | × | ഌ | ఌ | ಌ |
| 10 | × | ൡ | ౡ | ೡ |
| 11 | எ | എ | ఎ | ಎ |
| 12 | ஏ | ഏ | ఏ | ಏ |
| 13 | ஐ | ഐ | ఐ | ಐ |
| 14 | ஒ | ഒ | ఒ | ಒ |
| 15 | ஓ | ഓ | ఓ | ಓ |
| 16 | ஔ | ഔ | ఔ | ಔ |
| 17 | × | അം | అం | ಅಂ |
| 18 | × | അഃ | అః | ಅಃ |
| 19 | ஃ | × | × | × |




### கென்னடிக்குக் கீதை!

அமெரிக்கத் தூதராக புதிதாகப் பதவி யேற்றிருக்கும் பி. கே. நேரு என்பவர் அமெரிக்கத் தலைவர் கென்னடியை முதன் முதலாகச் சந்தித்த போது. பகவத் கீதை நூலைப் பரிசாக அளித்தாராம். போர்க்களத்தில் 'சகோதரர்களுடனு சண்டை யிடுவது?' என்று தயங்கிய அர்ச்சுனனுக்குக் கண்ணன் மெதபூட்டும் வகையில் செய்த புத்திமதிகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னாராம். சண்டை மூட்டுதல்—தகராறு ஏற்படுதல்—போன்ற பிரச்னைகள் இல்லாமல் உலகம் முழுதுமே, உணர்ந்து நடக்கவேண்டிய அறவுரைகள் கொண்டது திருக்குறள் என்பதை எல்லோரும் ஒப்புவர். என்ன செய்வது! டில்லிக்கு கீதைதானே தெரியும்!! நமது குறளை ஆங்கிலத்திலும் மொழிப் பெயர்த்திருக்கிறார்கள். ஆச்சாரியர்கூட ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். வ. வே. சு. உரை எழுதினார்—வ. வே. சு. அய்யர் 'பாக்கெட்டிலே' யே வைத்திருந்தார்—பாரதியார் பாடினார் என்று நாம் வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்! ஆனால் டில்லி!!

ஃ ஃ ஃ

### யானை பறக்கப்போகிறது!

ஆமாம், யானைதான் பறக்கப் போகிறது. மாயமுமல்ல-மந்திரமுமல்ல; ஆகாய விமானத்தில் ஏற்றப்பட்டு பறக்கப் போகிறது, யானை. என்னது யானையை ஆகாய விமானம் ஏற்றிக்கொண்டு செல்லுமா என்று அதிசயப்படுகின்றவர்கள் அந்தக் காட்சியை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இம்மாதம் 27-ந் தேதி கண்டிருக்கலாம். 'மோகன்' என்று பெயர் கொண்ட அந்த யானை, கானடாவிலுள்ள டொராண்டா எனும் ஊருக்கு விமானம் மூலம் அனுப்பப்படுகிறது. சென்னை அரசு, கானடா அரசுக்கு இந்த யானையை வெகுமதியாக வழங்குகிறது.

ஃ ஃ ஃ

### அடினர் அழுதார்

ஆட்சிபீடத்திலமர்ந்து அதன் போதையை அனுபவித்தவர்களுக்கு அதைவிட்டு விலகுவதென்றால், வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் சிறுபிள்ளைபோல அழுதிருக்கிறார் மேற்கு ஜெர்மானியின் காப்பாளராகயிருந்த அடினர்! அண்மையில் அங்கே நடந்த தேர்தலில் அவருடைய கட்சி தோற்றது. எதிர்க் கட்சிகள் வெற்றியடைந்தன. இதனால் அவரைப் பதவியிலிருந்து விலகுமாறு, சொன்னார்கள். அடினர் மேற்கத்திய வல்லரசுகளால், மிகமிக கவுரவிக்கப்பட்டவர். மேற்கு ஜெர்மனி என்றால் அடினர் சொன்னதே சட்டம் என்று கருதப்படுகிற அளவுக்கு, விளம்பரப் பெற்றவர் என்ன யிருந்தாலும், இவ்வளவையும் இழக்க எளிதில் மனம் வருமா. அவர் அழுததைப் பார்த்து 'போனால் போகிறது! இன்னும் ஒரு மாதத்துக்கு இப்படியே இரும். அதற்குள் ஏதாவது ஒரு கட்சியுடன் சேர்ந்து கூட்டு மந்திரி சபை அமைக்க முயற்சியும்' என்று எதிர்க் கட்சிகள் அனுமதித்திருக்கின்றனவாம்.

ஃ ஃ ஃ

### திரைப்படாதிபதி சிறையில்!

உலகப் புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் அவர். செல்வாக்கும் சிறப்புமுள்ளவர். அவர் தயாரித்த 'ரோஷமான்' போன்ற படங்கள் எல்லோராலும் பாராட்டப்பட்டவையாகும். அவரைப் பிடித்து அண்மையில் சிறையில் அடைத்திருக்கிறது ஜப்பானிய அரசு. ஜப்பானின் பெரிய புள்ளியான இவர், ஒரு ரயில் பாதை போட 'காண்டிராக்ட்' எடுத்தாராம். அதைச் செய்து முடிக்கப் 10 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்பட்டதாம். அதற்காக ஒரு பாங்கியில் கடன் கேட்டாரும். கடனை எளிதில் பெறுவதற்காக அந்த பாங்கி அதிகாரிகளுக்கு ஒரு கோடிக்குமேல் லஞ்சம் கொடுத்தாராம். இந்த லஞ்ச ஊழலில் பெரிய பெரிய அரசியல் வாதிகளுக்கும் சம்பந்தம் உண்டாம். முன்னாள் போக்குவரத்து மந்திரியான திருமதி நரகாட்சி என்பாரையும் போலீசார், கைது செய்திருக்கிறார்கள்.

—0—0—

இதோ ஒரு சஞ்சீவி

**கால் ஆணிக்கு**

(மேல் பூச்சு மருந்து)

காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி

**வாணி புக் டிபோ,**

3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.

# கூத்தாடும் குறைகுடம்!

"உன்னுடைய அழகு வழியும் அதரத்தைக் கண்டேன், கண்ணே! இரத்னத்தை அது நினைவூட்டியது. ஓரக் கண் கொண்டு நீ என்னைப் பார்க்கும் போது ஒரு பக்கம் அதிகமாகத் தென்படுகிறதே ஒளியுமிழும் வெள்ளை நிறம்! அது எனக்கு ஜொலிக்கும் வைரத்தை ஞாபகமூட்டியது. மதிவதனி! மாலை மதியமே! மலர்க்கொத்தே! சுழலும் கண்ணுள்! சுந்தரி! நீ சுவையைத் தோய்த்தெடுத்துப் பேசும்போது, தெறித்து தெறித்து விழுகின்றனவே, எச்

வில்லை, அக்கவிஞன் — தீயின் நாக்கினைக் காண்பதிலேயே காலம் கழித்தான். மணிமாடங்கள் கூடங்கள் மீது அவன் மனம் செல்லவில்லை, மண்வெட்டியும் கூடையும் சுமந்து பாடுபடும் குடும்பங்களைக் கண்டன. சேயிழையாரையும் அவர்களோடு சிந்துபாடும் சிங்காரப் புருடர்களையும் எண்ணவில்லை; செத்தும் சாகாமல் நித்தநித்தம் பாடுபடும் உழைப்பாளிகளையே எண்ணின. பட்டாடைகளை, அவன் பனுவல்கள், குறிப்பிடவில்லை; பாதிப்பட்டி

லாம்; ஆகா, இவனன்றோ கவிஞன என்று கூவினர்!!

அப்படிப்பட்டக் கவிஞன், மேடையிலேறி நிற்கிறுன். அவனருகிலே, தோழர் ஈ. வெ. கி. சம்பத்தும் நிற்கிறுர். எதிரே மக்கள்

மல்ல, சிறந்த அரசியல்வாதி! கவிதையையும் அரசியலையும் கலந்தூட்டும் இலட்சியவாதி...!! என்று போற்றுகின்றனர்!

* * *

"ஓகோ! அடிக்கடி நீ அனுதாபம் காட்டும் கவிஞர் கண்ணதாசனைப்பற்றித்தானே இவ்வளவும் எழுதுகிருய். அவரை தவிர தோழர் சம்பத்துடன் மேடையில் நிற்கக்கூடிய கவிஞர் யார் இருக்கிறுர்கள்?" என்று தோழர்கள் அவசரப்படக்கூடும்! இப்போது சம்பத்துக்காக வேலை செய்யும் இந்தக் கவிஞரை நான் குறிப்பிடவில்லை; இவர் தென்றலிலே மிதப்பவர்! நான் குறிப்பிடும் கவிஞன் தீயிலேயே வாழ்கிறவன்!!

அரிந்திரநாத் சட்டோபாத்யாயா என்கிற பெயரை அன்பர்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். தேசீயக்கவி சரோ

## வங்கத்துக் கவிஞன் பக்கத்தில் நின்று முழங்கிய சம்பத் எங்கே?

சில் துளிகள்: அவை, எனக்கு முத்துக்களை, கவனத்துக்குக் கொண்டு வருகின்றன. இப்படி, அந்தக் கவிஞன் எழுதியிருப்பானேயானுல், இவனும் ஒரு கம்பனுக்கு தாசன்' என்று படித்து ரசித்ததும் பழங்கூடையில் போட்டிருப்போம்! அக்கவிஞன் இவ்வண்ணம் எழுதினுனில்லை. வைரமும், ரத்தினமும், முத்தும், வானத்து நட்சத்திரங்களையோ, வையத்து அழகிகளையோ, வர்ணனைக்குரிய தெய்வ ஒளிகளையோ அவனுக்கு நினைவூட்டவில்லை.

னிகளையே நினைப்பூட்டின. வானம் அவனுக்கு ரம்மியமான காட்சியென்று ரசிக்கச் சொல்லவில்லை; வையத்து மக்கள் சிந்தும் இரத்தம் போய் அங்கே தங்கிவிட்டதோ என்று எண்ணச் சொல்லிற்று. மாலைமதியம், அவன் மனதிலே, மனேகரமான இதய

## நாவலருக்குத் தமிழ் தெரியாது என்றுல் நம்புமோ உலகம்!

வெள்ளம்போல, கவிஞன் ஒன்று சொல்கிருன்; உடனே சம்பத் அதை எதிரொலிக்கிருர்; கேட்கும் மக்களோ, சென்னையே, அதிர்ந்துவிடுமோ எனக் கையொலி எழுப்புகின்றனர். குயில் அவன்! எரிமலையாகக் குமுறிக் குமுறிக்கொட்டுகிருன்--நாமுள்ள சமுதாயம் ஏன் நலிந்தது, நலிவு போக்கிட வகையென்ன, நாம் ஏன் ஏமாந்தோம், என்பதற்கான விளக்கங்களை அள்ளித்தருகிருன் அவைகளைக் கேட்கும், மக்கள், ஆனந்த பரவசமாகின்றனர்— ஆகா! இவன் கவிஞன் மட்டு

ஜினிதேவியின் உறவினர். சிறந்த கலைஞர். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையிலேயே இருந்தவர். அறிஞர் அண்ணு எழுத இருந்த 'விஞ்ஞானி' எனும் திரைப்படக் கதையை ஆங்கிலத்தில் எழுதுவதற்கென்று அழைத்துவரப்பட்டவர், கடந்த முறை டில்லிப் பார்லிமெண்டிலே காங்கிரசை எதிர்க்கும் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தவர்!!

அவரும் சம்பத்தும் ஒரே மேடையில் நின்ருர்கள்! இப்போது அல்ல; சம்பத்து நம்முடனிருந்தபோது!! சென்னைமாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம், வழக்கம்போல் கொண்டாடும் மே தின விழாவொன்றிலே நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு,

## சொந்தக் கருத்து அல்ல பிறர் சொல்லிக் கொடுத்த கருத்து!

* * *

வைரங்களைக் காண்கிறேன்!— எனக்கு, குஷ்டரோகியின் புண்ணிலிருந்து கவனிப்பாரற்று வடிகின்றதே சீழ்! அதுதான் கவனத்துக்கு வருகிறது.

அழகு அழகான ரத்தினங்களைப் பார்க்கிறேன்!— சுரங்கங்களிலும் சோகம் நிரம்பிய கனிகளிலும் பாடுபடும் பாட்டாளியின் காலோ, கையோ அடிபட்டால் அப்போது வெளிப்படும் இரத்தத் துளிகளே ஞாபகத்துக்கு வருகின்றன.

கவர்ச்சி மிகுந்த முத்துக்களை நோக்குகிறேன்; கலப்பை தூக்கி உழைக்கும் விவசாயியின் உடம்பிலிருந்து சொட்டுச் சொட்டாக வழியும் வியர்வை முத்துக்களுக்கு முன் இவை எம்மாத்திரம்? — என்கிற எண்ணமே உருவாகிறது!!

* * *

ஆகா! இவனன்றோ கவிஞன் என்பீர்கள்!! வானிடையே மிதந்திடும் தென்றலிலே திளைக்க

ஆசைகளை உருவாக்கவில்லை; காலை எழுந்து வேலைக்குப்போய் இந்த மதியத்தின் அழகை அனுபவிக்கவும் ஏலாதவனுய் இடுப்பொடிந்து சாய்ந்து குறட்டை விடும் கும்பி நிறையாதவனின் அலங்கோலத்தையே காட்டின!

திருச்செந்தூர் மகாத்மியம், தீபாராதனை அழகு, திலோத்மையின் கேசம் பாதாரவிந்தம் வரை

## விண்ணு

பரவியிருந்த விந்தை, ரம்பையின் காதல், ஊர்வசிக்கும் இன்னொரு உல்லாசிக்கும் உண்டான விரக தாபம், இடையிலே நாரதர் புகுந்ததால் வந்த வம்பு, இவைகளைப் பற்றிப் பாடவில்லை அக்கவிஞன்; அமெரிக்காவின் போக்கு, ரஷியப் பொதுவுடமையின் நன்மை, உலகில் சமாதானம் நிலவ வேண்டிய அவசியம்; ஒவ்வொருவரும் எப்படியெப்படி வாழ வேண்டுமென்பதற்கான வழிகள் இவைகளைப் பாடினுன். அதனுல், படித்தோரெல்

தலைமைக் கழக அறிக்கை எண் 20—61

## மதுரை நகர கழகப் பணி

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர், "நம் நாடு" இதழில் 26—4—61-ல் வெளிவந்துள்ள அறிக்கைப்படி மதுரை நகர தி. மு. கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் வரையில், மதுரை நகர தி. மு. கழகப் பணியினை (பொதுக்கூட்டங்கள்—சிறப்புக் கூட்டங்கள்—ஊர்வலங்கள்—அறிக்கை வெளியிடுதல்—பண வசூல்—உட்கிளைகள், சார்பு மன்றங்கள் ஆகியவைகளுக்கு அவ்வப்போது ஆலோசனை கூறி நடத்தி வருதல் ஆகியவைகள்) மதுரை வட்டச் செயலாளர் பொறுப்பில் அமைந்துள்ள தனிக் குழுவே மேற்கொண்டு நடத்தி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஏற்பாட்டின்படி நடக்கும் கழகப் பணிகளுக்கு, கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு தந்து சிறப்பிக்கக் கெட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்', சென்னை-13. 26—9—61

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர்.

# நிறைகுடம் தளும்பவில்லை; குறைகுடம் கூத்தாடுகிறது!

விரும்பி அக்கவிஞர் கலந்து கொண்டார். அவருடைய முற்போக்கான எழுச்சியூட்டக்கூடிய ஆங்கிலக் கவிதைகளைப் படித்துச் சுவைத்த அண்ணாவும் இசைந்தார் அந்தமேடையில், தொழிலாளிகளின் துயரம் குறித்து ஆங்கிலத்தில் அவர் பேசினார்! அப்பேச்சை நான் மொழி பெயர்த்துச்சொல்கிறேன் என்று ஆவலோடு செய்தார், சம்பத்!

அந்த சம்பத் எங்கே? இந்த சம்பத் எங்கே!! என்றே என் மனம் எண்ணலாயிற்று. தலைநகரத்திலே வீம்புக்கு மாரடித்தாள்—வெண்சாமரம் போட்டாள்—வேண்டிய மட்டும் கறந்தாள் இவர்களைப்பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு பாடுபடுகிறது திராவிட முன்னேற்றக்கழகம்! அவர்களுக்காகவே இருக்கிறது, திராவிட முன்னேற்றக்கழகத்தில் மேனாமினுக்கிகள் இல்லை; மேட்டுக்குடியினர் வர பயப்படுகின்றனர்; பட்டுப் பட்டாடைகள் இல்லை; பகட்டில்லை, உண்மை நடைபோடுகிறது! உழைப்போர் இருக்கிறார்கள்!!

உழைப்போர்! எனவே ஆண்டுக்கு ஒரு முறையோ இரு முறையோ புத்தாடை உடுக்கும் 'பாக்யம்'தான் உண்டு அவர்களுக்கு. அவர் தம் மனைவியர், 'அரசியல் மேய்ச்சல்காரர்களை'க் நாசமாக்கிவிடும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

## மண், குன்றுமா

இருக்கின்ற திராவிடத்தை கனவே என்று
இருக்காத புதுக்கட்சி காணும் கூற்றைக்
கருத்தாக நாம்கொள்ளல் தவறு என்பேன்!
கரிக்கேது செந்தூர வர்ணம்! வீணே

திறக்காத பழம்வீட்டைத் திறந்து வேலைத்
திறந்தாலே நிறப்பூச்சைச் சரியாய் செய்த
உரத்தாலே யேசுவதாய் நினைப்பு! மண்ணின்
உதிரிகள்தான் குன்றுமோ? சீற்றம் பூக்கும்!

நி. கு. நடராசன்.

# இவர்களின் தகுதியை எடை போட்டுத்தான் வைத்திருக்கிறார்கள்!

எனும் போக்கில் சென்ற சில நாட்களுக்கு முன்பு தமிழ் தேசியக் கட்சியெனும் பெயரால் மாநாடு போட்டு, அந்த மாநாட்டில் பேசப்பட்ட பேச்சுக்களைக் கண்டதும்.

புரட்சிக் கவிஞரின் பொன்னான எழுச்சியூட்டக்கூடிய கருத்துக்களை அன்றைய சம்பத் எதிரொ

கணவனைக அடையாத காரணத்தால், கிழிந்தபுடவைக்கு மாற்றுப் புடவையில்லாமல்தான் அவதிப் படுகின்றனர். அவர்களால் ஆடை உடுத்த முடிவதில்லை! அரையாடையே உடுத்துகின்றனர்!!

அது ஒரு குற்றமாம்! தமிழ்த் தேசீயக்கட்சியின் கண்களுக்கு,

காண்பதெல்லாம் பாட்டாளி செய்தான்! அவன் காணத்தகுந்தது வறுமையா? பூணத்தகுந்தது பொறுமையா?—என்று தமிழ் நாட்டுப் புரட்சிக்கவிஞர் கேட்டார்!!

பாட்டாளியின் உடலிலிருந்து சிந்தும் வியர்வைக்கும் இரத்தத்துக்கும் ஈடாகுமா, முத்தும் இரத்னமும் என்று கேட்டார் இன்னொரு புரட்சிக் கவிஞர்!

அந்த மாநாட்டில் மட்டுமல்ல அதற்கு முதல்நாள் சென்னை மாநகரின் வேறொரு பகுதியிலே நடைபெற்ற தேசீயக் கவியரசர் பாரதியாரின் விழாவில் கலந்து கொண்டு பேசிய போதும் கவிஞர் கண்ணதாசன் சொன்னாராம், "நான் இத்தனை நாளும் அநாகரீகமானக் கும்பலிலேயிருந்துவிட்டு இப்போதுதான் நாகரீகமான கும்பலைக் காண்கிறேன்" என்பதாக.

இந்தக் கருத்து கண்ணதாசனுடைய சொந்தக்கருத்தல்ல!

# நலிந்தவர்களை நையாண்டி

லித்தார்! மகிழ்வுடனேயே எடுத்துச் சொன்னார்—மனதில் ஏழையருக்காகப் பாடுபடும் ஒரு கட்சியிலிருக்கிறோம் என்கிறஎண்ணம் அன்று இருந்தது அவருக்கு. ஆனால் புதுக்கட்சிக் கண்ட சம்பத்துக்கு விவசாயியின்வியர்வை தெரியவில்லை; அந்த வியர்வை முத்துக்களாக இருக்கக்கூடாதா என்று எண்ண தோன்றுகிறது போலும் புண்ணிலிருந்து வழியும் சீழ் புலப்படவில்லை, அதுகூட வைரமாகவே தெரிகிறது-மேலும் பாட்டாளியின் உடம்பிலிருந்து மண்ணுக்குள் பாயும் இரத்தத்துளிகள் நினைவுக்கு வரவில்லை; இரத்தினங்களே இதயத்தில் சதிராடிக் கொண்டிருக்கின்றன போலும்!!

உழவனின்துயர் உழைப்பாளியின் சங்கடம், ஏழையின் அவதி, இல்லாதவனின் குமுறல் ஆடை கட்டாதவனின் அவலம், திறந்த மேனியாய் நிற்கும் அவர் தம் குழந்தைச் செல்வங்கள் எண்ணையில்லாததலையர்கள் மூட்டை தூக்கி தூக்கி முதுகு கூனலான உருவங்கள், வண்டி தள்ளிடும் வறுமையாளர்கள் ரிக்ஷா இழுத்திடும் அழுக்குடையாளர்கள்—

அரைக்கால் சட்டை போடுகிறவர்கள் அநாகரீகவாதிகளாம்!

அவனிடம் முழு துணியில்லை; அதனால் அரைக்காலாடை அணிகிறான்.

## இரத்தம் தெரியவில்லை; இரத்தினமே எண்ணத்தில் சதிராடுகிறது!

அவனிடம் 'சோப்' வாங்க வசதியில்லை; அதனால் வெள்ளை வேட்டி கட்ட முடிவதில்லை.

அரைக்காலாடைக்குப் பதில் முழுதுணி தருவோம்! அழுக்காடை மறைந்து வெள்ளையுடுத்தி அவனும் கம்பீரப் பவனிவரச் செய்வோம்!! என்று பேசவில்லை, தமிழ் தேசியக்கட்சி மாநாட்டில்.

பகட்டுக்காரர்கள் பரிவு, பணவாசிகள் சகவாசம், காருடையார்களின் கைலாகு காமராஜருடன் பேட்டி, செட்டிநாட்டரசரின் சிரிப்பு, வட்டிக்கடைக்காரர்கள் உறவு—இவ்வளவு சீக்கிரம் புதுக்கட்சி கண்டவர்களின் புதுமையான எண்ணங்களைக்கூட

ஆனால் தமிழால் வளர்ந்து, தமிழ்க் கவிஞர் எனும் பட்டம் சூட்டப்பெற்றுப் பவனிவரும் கண்ணதாசனை, வசூல் வேலைகளுக்கு மட்டும் பயன் படுத்து

வதைவிட்டு, வாய்வீச்சுக்கும்பலியாக்கி வம்புகளையும் அள்ளியிறைக்கச் செய்திருக்கிறார் அன்பர் சம்பத்!!

அவர்கள் நடாத்திய ஊர்வலத்தின் 'பெருமை'யை விளக்கப்

## உடை மட்டும் வெள்ளை; உள்ளமோ இருட் குகை

பேசினாராம் கவிஞர் கண்ணதாசன், தமிழ்த் தேசீயக் கட்சி நடாத்திய ஊர்வலத்தில் நாகரீகமான வெள்ளை வேட்டிக்காரர்கள் வந்தார்கள். ஆனால் தி மு. க. நடாத்திய ஊர்வலத்திலோ, அரைக்கால் சட்டைகள் வந்தன" என்று.

அவருக்கென்று பொதுவாழ்க்கையில் சொந்தக் கருத்துக்கள், அமைவதில்லை. இருக்கும் இடம் எந்தளவுக்கு கற்பனை ஓடுகிறதோ அந்தளவுக்கு வர்ணிக்கக்கூடிய கற்பனை வளம் பெற்றவர் கண்ணதாசன். அதனால் மாநாட்டில், கண்ணதாசன்பேசியதற்குமுன்பு 'அரைக்கால் சட்டைகள்' என்கிற வாசகத்தை அன்பர் சம்பத்தே அளித்திருக்க வேண்டும்!!

தரக்குறைவாக, ஒருமாநாட்டில் தன் கட்சியைச்சார்ந்தவர் பேசப்பேச அதைக்கண்டு ரசித்தபடியிருந்திருக்கிறாரேயொழிய தடுக்கவில்லை! தான் பேசும்போது சம்பத் வருத்தம் தெரிவிக்கவுமில்லை!!

பயங்கரவாதிகள் ?
தரங்கெட்டவர்கள்
நாகரீகமற்றவர்கள்
வெள்ளை வேட்டி

# கண்ணாடி வீட்டிலிருந்து கல் வீசாதே!

## டாக்டர் ஹாமர்ஷீல்டு



உலக நாடுகள் பேரவையின்பொதுச் செயலாளரும் உலகில் அநுமதி காக்க ஓயாது பணியாற்றியவரும் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவருமான திருடாக்டர் ஹாமஷீல்டு அண்மையில் மறைந்த கொடுமை குறித்து பார்முழுதும் துக்கத்தில் ஆழ்ந்தது. அவருடைய இயற்கையான சாவு அவரை அணைத்துக் கொண்டிருந்தால் கூட பாரோர் ஒருவாறு தங்களைத் தேற்றிக் கொள்ள முடியும். அந்தோ! கொடுமை! கொடுமை! விமான விபத்துக்குள்ளானுர் என்றும், சுட்டு வீழ்த்தப்பட்டார் என்றும், வஞ்சகரின் வன்செயலுக்குப் பலியானுர் என்றும் இப்படிப் பலவிதமாக அல்லவா இந்தநல்லவரின் மறைவுக்கான காரணங்கள் தரப்படுகின்றன. அமைதி காக்கும் திருப்பணியினை மேற்கொண்டு,கடாங்கா சென்ற இந்த அமைதிக் காவலருக்கா இக்கதிநேர்ந்திருக்க வேண்டும்!

நமதரும் பெரும் தலைவராகத்திகழ்ந்த ஏ. டி. பன்னீர் செல்வத்தை ஓமான் கடலுக்குப் பலி கொடுத்துவிட்டு பதறியழுதோமே, அதே போல்தான் இன்று இந்தக் கரும வீரரை காதகர்களின் துணைகொண்டு கடாங்கா பலி கொண்டு விட்டது!

ஐம்பத்தாறு வயதாகியும் திருமணமே செய்து கொள்ளாதுபாருக்குநற்பணியாற்றிவந்து நாசகாலர்களின்கொடுஞ் செயலுக்கு இரையான இந்த நல்லவரின் நாமம் வாழ்க!

காகி விட்டால், எடுத்துப் போய் உவர்மண் போட்டு, வெள்ளையாக்கிக் கொண்டுதரும்சலவைத் தொழிலாளியும் — அரைக்கால் சட்டைதான்!!

அரைக்கால் சட்டை அணிபவர்களுடைய வேதனையில்தான், "வெள்ளை வேட்டிகள்" உலா வர முடிகிறது.

உடைகளை மட்டும்வெளுப்பாக வைத்துக் கொண்டு உள்ளத்தைக்குகையாக்கிக் கொண்டிருப்பவர்களை விட ஏழைகள் எவ்வளவோ மேல்.

வெள்ளை வேட்டிகளால்தான், கள்ள நாணயத் தயாரிப்பு வழக்குகள் உருவாகின்றன — வெள்ளை வேட்டிக் கட்டிகொண்டு வேஷம் போடுகிறவர்களால்தான் சந்துமுனைச் சரசிகள் உருவாக்கப்படுகிருர்கள்— 'காலணு' சவுக்காரம் போட்டால் எதுவும் வெள்ளையாகி விடும்; ஆனல் கண்ணதாசன் குறிப்பிடும் 'வெள்ளை வேட்டி'கள் அவர்களல்ல; சமூகத்தின் மேல் நிலையிலிருப்போர்!! அவர்களுடைய கட்சியில் தானிருக்கிருர்களாம்!

நாட்டின் மக்கள் தொகையில் முக்கால்வாசிப் பேருக்கு மேல் ஏழைகள்தான் — அவர்களுக்காகத்தான் நாடே ஒழிய, ஆடம்பரப் பிரியர்களுக்கல்ல! அவர்களுடைய ஏழ்மை படிப்பிலாமை காமுறுவது காமராசரையும் பெரியாரையும்தான்.

சம்பத் எந்தக் கல்லூரியில் பட்டம் பெற்ருர்—கண்ணதாசன் கரைத்துக் குடித்த நிகண்டுகள் எத்தனையென்பது நமக்குப் புரியும்.

நாவலருக்குத் தமிழ்த் தெரியாதென்ருல் நம்புமோ உலகம்— அன்பழகனுக்குப் பதில் கல்லூரிப் பேராசிரியராகக் கண்ணதாசனிருந்தார் என்று சொன்னல் கைகொட்டிச் சிறியாரோ!!

எத்தனையோ புலவர்கள் எம். ஏக்கள் வழக்கறிஞர்கள் டாக்டர்கள் உள்ள திராவிட முன்னேற்றக்கழகம் அநாகரீகக் கூடாரம் என்ருல், 'இது எதுவுமே' இலாத அந்த இடத்தை என்னவென்று சொல்வது!!

நிறைகுடம், தளும்பாது—என்பார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ நிறைகுடங்களைப் பெற்றிருக்கிறது.

இருந்தாலும் தன்னுலியன்ற அளவு, அந்தப் பெருமைகளையும் பட்டங்களையும் பதவிகளையும்உதறித் தள்ளிவிட்டு ஏழை மக்களுக்காகப் பாடுபடுகிறது. ஏழைகளை அண்ணனே தம்பியே அப்பாவே அம்மாவே, அக்காவே என்றழைத்து 'ஒரே குடும்பமாக'ப்

# செய்யும் உல்லாச புருடர்கள் !

கட்டாதவர்கள்
அரைக்கால் சட்டைகள்

இப்படியொரு அகராதி தொகுத்து வழங்கப்பட்டு வருகிறது, பிரிந்துபோன பெரியவர்களிடமிருந்து! அவர்களுடைய தரத்தையும் நாகரீகத்தையும் "அண்ணுதுரை" என்று பெயர் சொல்லி அழைப்பதோடு மட்டுமின்றி. எலே! ஏடா! போடா! என்று பேசுவதாக கேட்கும் தமிழகமும் சான்ருேரும் நன்ருக எடைபோட்டுத்தான் வைத்திருக்கின்றனர். இருந்தாலும் நம்மைக் கேவலமாக்க வேண்டும் என்கிற ஒரே கருத்தில் அப்படிப் பேசி வருகின்றனர்! அவர்கள்பேசியதாலோ, கூவியதாலோ "செச்சே தரங்கெட்டவர்களுடன் நமக்கென்ன வேலை?" என்று திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தோர் மள மள சட சடவெனப் பிரிந்து ஓடிவிடவில்லை!! மாருக, "ஐயோ பாவம்! வெண்ணெய் திரளும்போது தாழியை தடிகொண்டு உடைப்பது போல நேர்தல் வரும் !இச்சமயத்தில் ஒரு பெரிய கட்சியைக் கேவலமாக்க எண்ணி ஓடியதோடுமட்டுமின்றி; உதவாதவர்கள் என்று நேற்றுவரை பேசிய ஊராளும் காமராசர்களுடன் ஓடி ஓடி உறவாடுகின்றனரே ஒரு வேளை அவர்களுக்கும் இவர்களுக்கும் 'அட்வான்ஸ்' ஒப்பந்தம்ஏதாவது இருக்குமோ. அப்படிப்பட்டவர்களை விடக்கூடாது! நாம் இது நாள் வரையிலும் கழகத்தில் நேரடியாக பங்கேற்காமலிருந்தது சரியல்ல" என்று ஏராளமான மக்கள் முன்னைவிடப் பன்மடங்கு, ஆதரவு காட்டுகின்றனர்.

அக்கிரம வழியில் த. தே. க. தோழர்கள் செல்லச் செல்ல மக்களுக்கு நம்மீதுள்ள அனுதாபம் அன்பாக மாறி வருகிறது.

சுடுசொற்களை வீச வீச நாட்டு மக்கள் 'தூ! தூ! இதுகள் தரம் இதானு?' என்று நமது பெருந்தன்மைகண்டு அவர்களாகவே, ஆதரவுதர முன் வருகிருர்கள்.

அதன் ஒப்பற்ற காட்சிதான் சென்னையில் நடந்த திராவிட முன்னேற்றக்கழக ஊர்வலம்.

அந்த ஊர்வலம் அரைக்கால் சட்டைகள் நடத்தின ஊர்வலமாம்! வெள்ளை வேட்டிக்காரர்கள் இல்லாத ஒன்ரும்!!

"வெள்ளை வேட்டிக் கட்டிக் கொள்வதை'ப் பெருமையாக எண்ணும் விவேகிகள் அறிய வேண்டும்—அந்த வேட்டியை நெய்பவனும் ஒரு அரைக் காலாடை அணிபவன்தான்— அதை வீதி வீதியாக விலைகூறி அலைபவனும் அரையுடை உடுப்பவன்தான்—அந்த வேட்டிஅழுக்கைப்போக்கி நாகரீகவாதிகளாக்கத்தான் அரசியல் இயக்கங்களே ஒழிய நையாண்டி செய்ய அல்ல!

"ஏழ்மையைப் பார்த்து நையாண்டி செய்வதைவிட பெரியதொரு பாபமில்லை" என்ருர் காந்தியார்.

த. தே. கட்சி ஏழ்மையை நையாண்டி செய்வது மட்டுமல்ல—அவர்களுக்கு ஒரு கட்சியா—அது ஒரு கட்சியா— என்று மிட்டாமிராசுப் போக்கில் கேட்கிறது!

அநாகரீகவாதிகள் நிரம்பிய இடம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று அர்ச்சிக்கிறது!!

கற்ருரைக் கற்ருரே காமுறுவர் என்பது பெரியோர் வாக்கு. த. தே. க. தலைவர்கள் இப்போது, பழகி வாழ்வதைப் பெருமையாக எண்ணுகிறது.

குறைகுடம் கூத்தாடுகிறது —குறை கூறுகிறது—கொட்டுகிறது வார்த்தைகளை!!

உயர்ந்த உள்ளம் கொண்டவன், தாழ்ந்த மக்களை தாழ்வாக எண்ணமாட்டான். தன்னைப் போல் ஆக்கி மகிழவே விரும்புவான்.

அந்த வரிசையில் வந்தவர்கள் தான் அரசியலுக்கு இலாயக்கானவர்கள்.

ஆட்டம்போட்டுப் பாட்டுப்பாடி மற்றவர்களைக் கேவலமாகப் பேசியேதன் பெருமையை நிலைநாட்டிக் கொள்கிறவனுல் அவனுக்கும் பயனில்லை; நாட்டுக்கும் பயனில்லை.

## கவனிக்க!

2-ம் பக்கத்திலுள்ள 'தென்மொழிப்பாடம்' பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்களால் துவங்கப் பெறுகிறது.

எழுத்துக்களைத் தோழர்கள் அறிந்து கொள்வார்களாக, இதுபற்றி ஏற்படும் ஐயங்களை எழுதினுல், 'அப்பா' அவர்களே பதிலும் தருவார்கள்.

மீதி விளக்கம் அடுத்த இதழில்!

ஆசிரியர்,

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 1 வெள்ளி 29-9-61 கதிர் - 30-31

# பதினைன்கு ஆண்டுகள்

"அதைச் செய்தோம்! இதைச் செய்தோம்!" என்று அட்டவணை கொடுப்பதுபோல தன்னுடைய பதினான்காண்டு செயல்களை விவரித்து காங்கிரஸ் கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

அதிகப் பள்ளிக்கூடங்களை உண்டாக்கினேம்—இங்கே இத்தனை அணைகளைக் கட்டினேம்—இங்கே இத்தனை ஆலைகளை ஏற்படுத்தினேம்—சமுதாய நலத் திட்டங்கள்மூலம் கிராமங்களைப் புத்தொளி பூக்கும் இடங்களாக ஆக்கினேம்—என்று அந்த அறிக்கையில் அகில இந்திய காங்கிரஸ் விவரிக்கிறது!!

ஆலைகளில் எத்தனை வடக்கில்—அணைக்கட்டில் எத்தனை தெற்கில் என்கிற கேள்வி ஒரு பக்கம் இருக்க, சாதனைகள் என்று விவரிப்பவைகளை காங்கிரசல்லாது வேறு எந்தக் கட்சி ஆண்டிருந்தாலும் செய்திருக்கும். வெள்ளையனே இருந்தால்கூட இவைகளைச் செய்துதானிருப்பான்.

ஏனெனில் காங்கிரஸ் ஆண்டிருக்கும் காலம், ஒன்றல்லஇரண்டல்ல; பதினான்காண்டுகள்!!

இந்தப் பதினான்காண்டுகளிலே அது செலவழித்திருக்கும் பணம் கிட்டத்தட்ட இருபதினாயிரம் கோடி ரூபாய்களிருக்கலாம். இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள்—ஆண்டுதோறும் ஒவ்வொரு மாநிலமும் 'பட்ஜட்' மூலம் செய்யும் வரவு செலவுகள்—மத்திய அரசின் பட்ஜட்—வெள்ளையன் வைத்துவிட்டுப் போன ஸ்டர்லிங் தொகை; பாதுகாப்புத் தொகை—எல்லாவற்றையும் சேர்த்தால் குத்துமதிப்பாக இவ்வளவு தொகையில் சுமார் ஏழாயிரம்கோடி வரையில் இராணுவத்துக்குப் போயிருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மத்திய அரசின் பட்ஜட்டில் பாதிக்குமேல் பாதுகாப்பு துறை விழுங்கியே வருகிறது. அதுபோக மீதிப் பணத்தைக்கொண்டு காங்கிரசல்ல எந்த அரசும் இந்தச் "சாதனைகளை" இதைவிட அதிகமாக செய்தே இருக்கும்!!

இருந்தாலும் இவர்களில்லாவிடில் இதெல்லாம் நடக்காது என்பது போல தன் சாதனைகளை அடுத்துவரும் தேர்தலையொட்டி மக்களுக்கு அறிவித்திருக்கிறது. இந்த மாயமான் விளையாட்டைப் பார்த்து ரசித்துப் பரவசப்படக்கூடிய நிலையில் இன்று மக்களில்லை!!

* * *

"எல்லாம் சரிய்யா! இருந்தாய் 14 ஆண்டு மந்திரியாக, ஆனல், என் வீட்டுக்கு வேண்டிய அரிசி—உப்பு—புளி—மிளகாய் விலை விஷம் போல் ஒவ்வொரு ஆண்டும் ஏறிக்கொண்டே போகிறதே—"

"சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு, இந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு என்று ஒவ்வொரு ஆண்டும் வேலையில்லா திண்டாட்டம் வளர்ந்து கொண்டே போகிறதே—"

"ஏனய்யா! 14 வருடத்துக்கு முன்பு நாங்கள் கட்டிய வரி என்ன? இப்போது கட்டுகின்ற வரி என்ன? ஒன்றுக்கு மூன்றாக வல்லவோ உங்களுக்கு அதிக வரி கட்டி வருகிறோம், அப்படியிருந்தும் அடுத்து வரப் போகும் ஆண்டுகளில் அதிகவரி போடப் போவதாகச் சொல்கிறீர்களே..."

"உண்மையாகக் கேட்கிறேன்! வெள்ளையன் காலத்தில் நிர்வாகச் செலவைவிட இப்போது உங்களால் எவ்வளவு ஏறியிருக்கிறது? அவன் காலத்தில் ஒரே ஒரு கவர்னர்! உங்கள் காலத்தில் கவர்னரும் உண்டு; அரை டஜன் ஒரு டஜன் என்று மந்திரிகளும் உண்டு. டில்லியில் மட்டும் கிட்டத்தட்ட அரை நூறு மந்திரிகள்! அப்பப்பா—வேண்டியவர்களுக்கு ஒரு இலாகா—அதுக்குப் பல அதிகாரிகள்...அய்யய்யோ! வயிறே எரிகிறது!!"

"அப்படித்தான் கும்பல் கும்பலாக அதிகாரிகளை நியமித்து அழுகிறீர்களே பணத்தை; அரை டஜன் ஒரு டஜன் மந்திரிகளாக யிருக்கிறீர்களே! வெள்ளையன் காலத்தைவிட உங்கள் காலத்தில் நிர்வாகம் சரியாக இருக்கிறதென்று சொல்ல முடியுமா? ஊழல்கள் இல்லையென்று கூறமுடியுமா? மகிழ்ந்து பாராட்டி பத்ம பூஷணம்

(8-ம் பக்கம் பார்க்க)

# சென்னையில் மற்றொரு 'கடல்!'

## கோட்டைமுன் தி. மு. க.

## கொந்தளித்த உரிமை மூச்சு!!

தன்னை ஆதரிக்கும் நிலப் பிரபுக்கள் - மடாதிபதிகள் ஆகியோருக்குச் சலுகைகள் தரும் விதத்தில் காங்கிரசாட்சி கொண்டு வந்திருக்கும் 'மிச்சவரம்பு சட்டத்தின் குறைகளைச் சொல்லி, உழவர்களின் உரிமைக் குரலை தி. மு.க., சென்னைக் கோட்டை முன்பு 28-ந் தேதி எழுப்பியது.இதுநாள் வரை யாரும் கண்டிராத மக்கள் கடல் திரண்டெழுப்பிய உரிமைக் குரலுக்கு ஊராளும் ஆட்சி செவி சாய்க்குமா? சட்ட சபையில் தி. மு. க சொன்ன திருத்தங்களை புனராலோசனை செய்யுமா! நீதி நெறியை நிலைநாட்டுமா!!

# நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

-7-

அன்பழகன், கருணாநிதி ஆகியவர்களைக் கூட்டங்களுக்கு அழைக்க வேண்டாமென்றும், அப்படி யாராவது அழைத்து நடத்துவதாகச் செய்தி அனுப்பினால் அதை "விடுதலை" யில் போட வேண்டாமென்றும், அய்யா, ஆசிரியர் குருசாமிக்குத் 'தாக்கீது' அனுப்பியிருந்தார்கள். அதைக் கண்டதும் எங்களிடம் குருசாமியண்ணன் ஓடிவந்தார்! அப்போதெல்லாம் அவருக்கும், அய்யாவின் போக்கு பிடிக்காமல்தானிருந்தது. அதோடு கருணாநிதி போன்றோர் மீது அவருக்குத் தனியான அன்பும் உண்டு. உற்சாகமாகப் பாடுபடும் வாலிபர்களையும் உணர்ச்சி வழியப் பேசும் கல்லூரிக் காளைகளையும் கண்டு, 'அப்போதைய குருசாமி' மகிழ்வார். அவர் எதிலும் எளிதில் உணர்ச்சி வயப்படுகிறவர்! இக்கடிதத்தைக் கண்டதும், பதறிப்போய், அப்போது சென்னைக்கு வந்திருந்த அண்ணாவுக்கு டெலிபோன் செய்தார், குருசாமியண்ணன். அன்று பண்ருட்டியில் ஒரு பொதுக்கூட்டம்! தென் ஆற்காடு மவட்டச் செயலாளராகயிருக்கும் குறிஞ்சிப்பாடி சாம்பசிவமும் அவருடன் சில தோழர்களும் தடையுத்தரவை மீறிக் கூட்டம் போட்டதற்காகத் தண்டிக்கப்பட்டு சிறையிலிருந்து மீண்டதை யொட்டிப்பாராட்டுக் கூட்டம்!! அப்போதைய முதலமைச்சரான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்கு, குறிஞ்சிப்பாடி சாம்பசிவம் உறவினராவார். ஓமந்தூரார் குடும்பத்திலேயே ஒருவர் கழகப் பற்றுக் கொண்டு விளங்குவது, எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிருந்தது.

அந்தப் பாராட்டுக் கூட்டத்தில் அய்யாவும் அண்ணாவும் கலந்து கொண்டார்கள். பண்ருட்டிக்கு அண்ணா போய்விட்டதாக டெலிபோன் மூலம் தெரிய வரவே குருசாமியண்ணனும், அங்கேப் புறப்பட்டுப் போனார், அண்ணாவிடம் தெரிவித்தார். இந்தச் செய்தி தெரிந்ததும், 'இப்படிப்பட்ட முறைகள் தவறு. கழகத்தின் கொள்கைக்கு மாறுபாடாக நடந்தாலொழிய யார் மீதும் நடவடிக்கை எடுப்பது, கூடாது. நாலு பேருள்ள பொது வாழ்க்கையில். ஒவ்வோர் சமயம் சிற்சில கருத்தலைகள் மோதவே செய்யும்' என்பதை வெகு நாசூக்காக அய்யாவிடம் எடுத்துரைத்து, வாதாடி மேற்படி அறிக்கை பத்திரிகையில் வராதபடி அண்ணா செய்தார்கள்!!

* * *

...தான் பெற்ற பிள்ளைகள் தளிர்போல் வளர்ந்து நிற்பதைக் கண்டு மனம் 'பொறுத தந்தையும் உண்டோ, உலகில்? ஏனோ அந்தச் சுபாவம், அதிகமாகிக் கொண்டே வந்தது, அய்யாவுக்கு! அதற்குக் காரணம், இவர்கள் எல்லாம் வளர்ந்தால், ஏன், எதற்கு என்ன என்று கேள்வி கேட்க ஆரம்பிப்பார்களோ என்கிற பயம்தான். ஆதிகாலத்துச் சுயமரியாதை இயக்கத்தில் இப்படிப்பட்டப் கேள்விகளை எழுப்புவோர் இருந்ததில்லை! ஏதோ கூட்டாஞ்சோறு ஆக்கிச் சாப்பிடுவோர் போல ஒன்றுகூடி ஈரோட்டில வசிப்பதும், பல கிளைநதிகள் போல ஆங்காங்கு போய் சொற்பெருக்காற்றி விட்டு வருவதுமாக அப்போது, இயக்கம், இருந்தது!! அப்படியிருந்த நிலை அய்யாவுக்கு வசதியாகவும் பெருமையாகவும் இருந்தது. ஏழெட்டு ஆட்களை வைத்துக் கொண்டு ஊரில் வாழும் பெரிய மனுஷத்தனத்துக்கும், ஊருக்குப் பதில் சொல்லக்கூடிய பஞ்சாயத்துத் தலைவராக இருப்பதற்கும் எவ்வளவோ வேற்றுமைகள் இல்லையா? அதோ வருகிறார் பெரிய மனிதர்!—என்கிற புகழ்ச்சி, பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் போதும் கிடைக்குமென்றாலும், அது என்ன, இது என்ன, என்று கேள்விக்குப் பதிலும் சொல்ல வேண்டுமே? இப்படியொரு நிலை தனக்கு எந்தக் காலத்திலும் வரக் கூடாது என்பதில், இன்றைய தினமும், அய்யா எச்சரிக்கையாக இருந்து வருகிறார். இதனை 'மிட்டாதார் மனப்பான்மை' எனலாம், தமிழில்! 'பூர்ஷ்வா' தன்மை என்பார்கள், கம்யூனிஸ்டுகள்!! அப்படிப்பட்ட பூர்ஷ்வாக் குணம் வந்ததற்குக்கூட அய்யாவைக் குற்றம் சொல்லமுடியாது.

எந்த மனிதனும் சூழ்நிலைகளுக்கொப்ப, மனவளம் பெறுகிறான். பணக்கார வீட்டுப் பிள்ளை, அதே சூழ்நிலையில் வளர்வதால், பணக்காரத் தன்மைகளான அடாவடி யாரும் தன்னைக்கண்டு மரியாதை செய்ய வேண்டும் என்ற ஆசை அப்படி மரியாதை செய்யாதவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்கிற கோபம் கொள்கிறான். அய்யா, பணக்கார வீட்டுப் பிள்ளை! அவர் வளர்ந்த முறை கூட அப்படித்தான்!! அதனால், அவருடைய மனதில், இளம் பிராயத்து எண்ணங்கள், ஆழமான இடத்தைப் பிடித்துக் கொண்டன. அப்படிப்பட்டவர், எப்படி ரஷ்யாவுக்குப் போனார், யாரும் கண்டு மிரளக்கூடிய கொள்கைகளைப் பேசினார் என்று கேட்கக் கூடும். அந்தப் பகுதிதான், இன்றைக்கும் நம்மால், வணக்கத்துக்குரியதாகக் கருதக்கூடிய பகுதியாகும்......

ஒரே மனிதன், ஒரு சமயம் இரவாகவும், இன்னொரு சமயம் பகலாகவும் இருப்பதுண்டு!! பகலாயிருக்கும்போது, நல்லவன், உத்தமன், உதாரகுணமுள்ளவனாகயிருப்பான். இரவாயிருக்கும்போது அவனுடைய சொந்தக்குணங்கள் வந்துவிடும். சொந்தக்குணங்களை ஆழ வெட்டிப் புதைத்து மூடிவிட்டு, தான் உலகில் கற்ற ஒரு கொள்கையைத் தன் குணமாக ஆக்கிக் கொள்ள வேண்டுவதுதான், பொது வாழ்க்கையின் அம்சமாகும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று நடத்தல் அரசியலையும் வியாபாரமாகக் கருதுவோரின் செயல். அரசியல்வாதி—சமூகத் தொண்டன்—எப்போதும் பகலாகவே யிருக்க வேண்டும்!! அய்யா அவர்கள்; தன்னுடைய இயற்கைச் சுபாவங்களைப் போட்டுப்போட்டு அமுக்கி வைத்துக் கொண்டிருந்தார் என்றாலும் பண விஷயத்தில், அவருடைய சுபாவம், எல்லாவற்றையும் தூக்கி அடித்துவிடக் கூடியதாகும் யாரையும் பணத்தைக் கொண்டு எடைபோடுவது அவருடைய இயல்பாக அமைந்து விட்டது.

"என்னங்க பண்றது! 'அவரே' சொல்கிறார்—'அவரே' செய்யச் சொல்கிறார் — 'அவரே' ஆளனுப்பி விட்டார்..." என்று அய்யாவின் வாயால் சொன்னதைப் பலர் கேட்டிருப்பார்கள்! இப்போதும்கூட 'அவரே' என்பதற்கு அய்யா மதிப்பு கொடுப்பதால்தான் காங்கிரஸ் காமராசரைக் கட்டியணைப்பதில் ஓடியாடிப் பாடுபடுகிறார்!!

செட்டிநாட்டரசர், சர். ஆர். கே. எஸ்.சர்.ஏ. ஆர், நெடும்பலம் சாமியப்பா போன்றவர்களுக்கு அய்யாவிடம்கிடைத்தஅன்புக்கும் மரியாதைக்கும் அண்ணன் அழகிரி, எஸ். வி. லிங்கம், பொன்னம்பலம்பலனார் போன்றோர் பெற்ற அன்புக்கும் அனுசரணைக்கும் ஏராளமான வித்தியாசங்களுண்டு. யார் ஒரு இயக்கத்தின் மூலவர்களோ அவர்கள் ஏழையாகயிருந்ததால்எடுபிடிகள் போலஎண்ணப்பட்டார்கள்!

யார் ஒரு இயக்கத்தை வெயில் எரித்தால் வந்து தங்கக்கூடிய மரம்போல எண்ணினார்களோ அவர்கள் இயக்கத்தின் மூலவர்கள்போல மதிக்கப்பட்டார்கள்!! இந்த 'ஜஸ்டிஸ்' கட்சி மனப்பான்மைக்குச் சாவுமணி அடித்தவர் அண்ணாதான்.

## ஒருவராவது உண்டு !

ஒரு மெம்பர்: திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் தாராங்கதாரா ரசாயன தொழிற்சாலைக்கு மாநில அரசால் உதவி ஏதாவது கொடுக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எவ்வளவு?

அமைச்சர் பக்வத்சலம்: மேற்படிக் காஸ்டிக் சோடா தொழிற்சாலை ஏற்படுத்தியுள்ளதராங்கதாரா தொழிற்சாலையில் சர்க்கார் 10 லட்சம் ரூபாய்க்கு மூலதனம் போட்டுள்ளது.

கேள்வி: இந்தத் தொழிற்சாலையில் முழுக்க முழுக்க வடநாட்டுக்காரர்களே இருக்கிறார்கள். தென்னாட்டுக்காரர் ஒருவர்கூட இல்லை என்று அங்கு அதிருப்தி இருப்பது தெரியுமா?"

அமைச்சர்: ஒருவர்கூட இல்லை என்பது சரியல்ல!

## உடன் பிறந்தோரே

இந்த இதழில் 'பட விளக்கக் கட்டுரைப் போட்டி'யின் முடிவை அறிவிக்க இயலவில்லை.

ஏராளமான தோழர்கள் பங்கேற்றிருக்கின்றனர். நடுநிலையாளர்கள்பார்வைலிருந்து வந்தபிறகு இப்போதுதான் நான் புரட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

எல்லா விபரங்களும், 'நாஜிசம்' கட்டுரையும் அடுத்த இதழில் வரும்.

—ஆசிரியர்.

சீமான் மத்தியில் பழக நேர்ந்த சமயத்திலும் அண்ணா, 'அவரே' சொல்கிறார் என்பதற்கு இடமளித்ததில்லை! ஆச்சாரியார் அமைத்த முதல் காங்கிரஸ் மந்திரிசபை ராஜிநாமா செய்ததும் அப்போதிருந்த வெள்ளைக்காரக் கவர்னா, ஜஸ்டிஸ் கட்சியைக் கூப்பிட்டு மந்திரிசபையை அமைக்கச் சொன்னார். எப்படியாவது அய்யாவைச் சம்மதிக்க வைத்து, மந்திரி சபையை அமைத்துவிட வேண்டும், தான் முதலமைச்சராக விளங்க வேண்டுமென்பதில், செட்டிநாட்டரசர் முத்தையா அவர்கட்கு ஆசைவந்து விட்டது. அய்யாவைச் சந்தித்து 'ஆசி'யும்கூடப் பெற்றாகி விட்டது. அதனை முறைப்படி செய்வதற்கான 'சடங்கு'போல: ஜஸ்டிஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் செட்டிநாட்டரசரின் அடையாறு மாளிகையில் போட்டாகியும் விட்டது. எடுபிடிகள் கார்கள் இனிப்பான சாப்பாடு, எல்லாம் தயார்பண்ணியும் ஆயிற்று. ஆனால், அத்தனை திட்டங்களையும் உடைத்து அந்தத் தீர்மானம் காரியக் கமிட்டியில் நிறைவேறாமல்செய்தவர் அண்ணா தான்!

அய்யாவிடமும், நாட்டின் நிலையை விளக்கி காங்கிரசார் உதறிவிட்டுப் போன இடத்தில் உட்காருவது எதிர்காலத்தின் சாபத்துக்கு ஆளாக வேண்டிய சம்பவமாகும் என எடுத்துச் சொல்லி அந்த முடிவு வராமல் தடுத்தார் அண்ணா! அதே போல, கம்பராமாயணத்தை கொளுத்துவதென்று முடிவு செய்த அய்யா சர். ஆர். கே. சண்முகம் அடித்த தந்தியைக் கண்டதும் கைவிட்டார்—ஆனால், அண்ணாதான் ஊருக்கு ஊர் போய், அய்யா சொன்ன புரட்சிகரமான கருத்துக்கு வாதாட நேர்ந்தது!! உண்மையில் ஜஸ்டிஸ்கட்சியை திராவிடர் கழகமாக சேலம் மாநாட்டில் அண்ணா, உருமாற்றியது பெரிய நிகழ்ச்சியாகும். அதற்கு அய்யாவும் சம்மதம் கொடுக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கிக் காட்டி அண்ணா வென்றார்!!

ஆனால் அண்ணாவுக்கு அய்யாவிடம், அதற்குமேல் வெற்றி கிடைக்கவில்லை. ஒரு சிலருடைய இயக்கமாகயிருந்தது, மக்கள் இயக்கமாக்கிடக் கனவு கண்டு, அண்ணா நனவாக்கினார்!

அப்படி மக்கள் இயக்கமானதும், 'முன்பு ஊருக்கு இரண்டு பேர்—இப்போது பத்து பேர்' என்று அய்யா கருதலானாரே ஒழிய அந்த மக்கள் இயக்கத்துக்கு தக்கபடி தன் மனநிலையை 'பகலாக்கி'க் கொள்ளவில்லை!

வீட்டுக்குள்ளிருக்கும் ஒரு இயக்கம் நாட்டுக்குரியதாக்கப் படும்போது அங்கே ஜனநாயகம் அரும்பும். அந்த ஜனநாயகத்தை மதித்து அதன்படி நடக்கவேண்டும். இல்லை! இல்லை! எப்போதும் நான் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும்!!—என்பது சர்வாதிகார முறையாகும். அய்யாவுக்கு எங்கே தன் கையை விட்டுஇயக்கம் போய்விடுமோ என்கிற பயம் வளர்ந்து வருவதைக் கண்ட அண்ணா, "அய்யா! உங்கட்கு அந்தப் பயம் வேண்டாம். சுயமரியாதை இயக்கத்தைக் கண்ட சுடர் தாங்கள்! ஜனநாயகம்வளர வளர, எதுவும் மாறவே செய்யும். அந்த மாறுதல்கூட உங்களைப் பாதிக்காத வகையில் தங்களை என்றும் இந்தக் கழகத்தின் 'நிரந்தரத் தலைவராக' நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்" என்று திருச்சி திராவிடர் கழக மாகாண மாநாட்டிலே தீர்மானமும் கொண்டு வந்து அண்ணா நிறைவேற்றினார்!! அய்யாவின் சேவை பெரிது—அவருடைய சேவை நாட்டுக்கு வேண்டும்—அதே சமயம் திராவிடர் கழகம் மக்கள் இயக்கமாக வளர வேண்டும்—அப்படி வளர்ந்தால் அங்கே ஜனநாயக மணம் எழவேச்செய்யும்—அப்போதுகூட அய்யாவின் சேவையும் தலைமையும் பாதிக்கப் படக்கூடாது என்று கழகத்தையும் அய்யாவையும்பாதிக்காவகையில் முயற்சிகள் பல செய்தவர் அண்ணா!

அப்படிப்பட்ட அண்ணாவை, அய்யாவை ஒழித்துவிட்டுத் தலைமையைப் பற்ற விரும்பினார் என்று காற்றுக் கோழிகள் சில கத்துவதுண்டு. அய்யாவால் கழகத்துக்குப் புகழ் கொண்டு வரப் பாடுபட்டவர், அண்ணா. திருச்சி திராவிடர் கழக மாநாட்டில், அய்யாவைநிரந்தரத் தலைவராக்கி அண்ணா தீர்மானம் கொண்டு வரப் போகிறார். மேடையில் அய்யாவை வைத்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தைக் கொணர, அண்ணா விரும்பவில்லை. அதனால், "அய்யா! கொஞ்சம் நீங்கள் வெளியில் போயிட்டு வாருங்கள்" என்று அனுப்பிவிட்டு பிறகு அத்தீர்மானத்தைப் பிரரேபித்து வெளியில் போன அய்யா பந்தலுக்குள் நுழைகின்றவரை தனதுபேச்சை நிறுத்தாமல், அய்யா வருகிறார் எனத் தெரிந்ததும் "கொஞ்ச நேரத்துக்கு முன்பு சாதாரண தலைவராகச் சென்ற பெரியார் இப்போது நிரந்தரத் தலைவராக வருகிறார்கள்!" என்று அறிவித்த அந்தக் காட்சியை இப்போது எண்ணினாலும் உடல் சிலிர்க்கிறது! ஓயாது சில நிமிடங்கள் கையொலி எழுப்பிய பல்லாயிரக் கணக்கான மக்களில் நானும் ஒருவன்!!

* * *

என்னென்ன செய்தும், அய்யா தன் வழியே போகிறார் என்றபோதுதான் 'தளபதி' என்று கருதப்பட்ட அண்ணா, 'தளர்பதி'யானார் அதைக்காட்டிக் காட்டி அய்யா, அண்ணாவின்மீது எரிச்சல் ஏற்படும் சூழ்நிலைகளை ஒருபக்கம் உண்டு பண்ணி வந்தார் என்றாலும், கழகத்துக்குள் புகுந்த 'புது இரத்தம்' அண்ணாவின் வழியை நன்றாக உணர்ந்து சரியென்றும் நம்பியது. சமயம் வரும்போது அண்ணாவைப்போல் உள்ளத்தில் வைத்துப் புழுங்காமல் வெளியிடவும் செய்தது. அப்படி வெளியிட்டவர்களைப் பழி வாங்கி விரட்டிவிட அய்யாநினைத்தார்கள்! அப்படிப்பட்ட சமயங்களில் அண்ணா குறுக்கிடவே, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள்!

### திருத்தம்

'கூத்தாடும் குறைகுடம்' கட்டுரையில் போடப்பட்டுள்ள 'வங்கத்துக் கவிஞன்' என்பதை 'சிங்க நிகர் கவிஞன்' என்று திருத்திக் கொள்க. (ஆ-ர்)

தாத்துக்குடி மாநாட்டுக்கு வரவில்லை என்பதைச் சாக்குக் காட்டி எரிச்சலை அதிகமாக்க முடிந்ததே தவிர அண்ணாவை வெளியேற்றினால் அதனால்வரும் விளைவை அய்யாச் சரியாக உணர்ந்ததாலேயே ஈரோட்டில் தனிமாநாடுபோட்டு அண்ணாவை தலைமை வகிக்கச் சொல்லி, "பெட்டிச்சாவியை உன் கையில் கொடுத்துவிட்டேன்," என்று பேசினார்கள்!!

கழகத்தவரோ களிப்பு ஒரு சமயமும், கோபம் இன்னொரு சமயமாக இதுவா, அதுவா என்று புரியாமல் ஆடிக் கொண்டிருந்த சமயம். அப்போதுதான் அந்த திடுக்கிடும் செய்தி வந்தது. அந்தச் செய்தியையும், எனக்கும் நண்பர் பூ. கணேசனுக்கும் ஆத்திரத்தோடு வந்து அறிவித்தவர் அண்ணன் குருசாமிதான்!!

(தொடரும்)

(9-ம் பக்கம் தொடர்ச்சி )

பட்டம் கொடுக்கப்படுகிறவர்கள் கூடவல்லவா கொள்ளையடித்தனர் லட்சக்கணக்கில், என்று கேள்விப்படுகிறோம்!!"

மக்கள் மன்றம் இதைப்போல எண்ணற்ற கேள்விகளை இந்த மகானுபாவர்களை நோக்கி வீசிய வண்ணமே இருக்கிறது.

காங்கிரஸ் சொல்லும் சாதனைகளைக் கண்டு ஆனந்தமோகனம் பாடும் நிலையில் இல்லை மக்கள். அடுப்பங்கரையில் அனுதினமும் கிளம்பும் ஒப்பாரியே போதும் காங்கிரசாட்சியின் வேதனைகளைச் சொல்ல.

* * *

சுதந்திரம் கொண்டுவந்த கட்சி அதே வேகத்தில் மக்களுடைய இன்பத்துக்கான புதுவழிகளைக் கண்டுபிடித்து அமுல்நடத்தியிருக்க வேண்டும், ஆனால் காங்கிரஸ் பழைய சிம்மாசனத்தில் உட்கார்ந்து அழகு பார்க்கவே இத்தனை ஆண்டுகளையும் செலவழித்திருக்கிறது.

"ஆகா! ஆண்டு 14 ஆச்சே!! நாம் நடந்துவரும் தீய பாதையைச் செப்பிடச் சில கட்சிகள் முளைத்துள்ளனவே. என்ன செய்வது?" என்கிற பயம் மோத மோத இந்தச் சமயம் மக்களுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்ப முனைந்திருக்கிறது காங்கிரஸ் கட்சி!!

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலேயே அந்தக் கட்டம்தான் மிக மிக அதிகமாகவும் மிகைப்படுத்தியும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"இந்தியாவின்ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டியது முக்கியம்; நாடெங்கும்பிரிவினைச்சக்திகள் சூழ்ந்துவிட்டன. ஆபத்து! ஆபத்து! இந்த ஆபத்து இல்லாமலிருக்க வேண்டுமானால் பாரதமாதாவைக் கூறுபோடாமல் தடுக்க வேண்டுமானால்..." இப்படி ஓலமும் ஒப்பாரியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

"அதோ பார் தேர்!" என்று சொல்லிவிட்டு அந்தப் பக்கம் திரும்பியதும் பையிலிருக்கும் பர்சை அடித்துக்கொண்டு ஓடுவது திருவிழாக்களில் உலவும் திருடர்கள் சாதுர்யமாகும்.

அதே முறையில் "அய்யோ! பாரதமாதா!! என்று அலறிவிட்டு, இந்த முறையும் ஆட்சியில் உட்கார என்னென்ன செய்யலாமோ அத்தனையும் செய்ய முயற்சிக்கிறது காங்கிரஸ்.

அந்த முயற்சியின் பிரதிபலிப்பே காங்கிரஸ் தேர்தல் அறிக்கை!

சாகசத்துக்கு ஆளாக இத்தடவை மக்கள் முன்வர மாட்டார்கள்.

"பட்டதுபோதும்; பட முடியாதினித் துயரம்"—என்கிற நிலையில் இன்றைய தினம் இருக்கிறார்கள் மக்கள்.

அவர் தம் மொழி—நலன்—வாழ்க்கை இத்தனையையும்பறிக்கும் "அகில இந்தியத்தை"விட தனக்கென்று ஒன்று பெற்று அதற்குள்—இன்பமாக உலவுவதையே இன்றைய இதயங்கள் விரும்புகின்றன!

மத்திய ஆட்சி ஏன்? அதற்கென்று வரி ஏன்?—என்று கேட்க தலைப்பட்டிருக்கிறது மக்கள் மன்றம்.

அதன் தீர்ப்பு இத்தடவை எப்போதும் போவிருக்காது என்பதை இப்போதே "அகில இந்தியங்கள்" உணர்வது நல்லது!!



# கேரளத்தில் தி.மு.க

"கேரள மக்களுக்கு சுதந்திர அரசாகப் பிரிந்து போவதற்குள்ள முழு உரிமைகளும் இருகக வேண்டும். இந்தியாவிலிருக்கும் மற்ற சுதந்திர அரசுகளின் மக்களோடு நம்பிக்கையுடன் ஒத்துழைக்கவும், ஒன்ருக இணையவும் உரிமைகள் இருக்க வேண்டும்."

சுதந்திர கேரள கமிட்டி

27-4-51

* * *

"கேரளம் சுதந்திர அரசாகப் பிரியவேண்டும் என்று, 'கேரள சோஷியலிஸ்டு பார்ட்டி' கூறும்போது தமிழகமும், ஆந்திரமும், கன்னடமும் விடுதலை பெற்ற அரசுகளாகத் திகழ வேண்டுமென்றே கூறுகிறது"

--மத்தாய் மஞ்சூரான்

தலைவர், கே. எஸ். பி.

* * *

"அரசியல் அதிகாரத்தைப் போலவே அவர்களது கலாச்சாரத்தையும், மொழியையும்

**த.வே. திருமாறன்**

மற்ற பகுதிமக்களிடம் திணிப்பது ஆதிக்கவாசிகளின் தந்திரமாகும்.

தென்னட்டு மக்களிடம் மத்திய பீடம் இந்திமொழியை வலியுறுத்திப் புகுத்துவது இந்த எதேச்சாதிகார எண்ணத்தினுல்தான் !

தென்னிந்தியர்களை அடக்கி அவர்களது சுதந்திர உரிமைகளைப் பறிப்பதுதான் மத்திய சர்க்காரின் திருப்பணியாக இருக்கிறது. தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம் போன்ற நாடுகளைத் தங்களது விவசாயத்திற்குத் தேவையான இயற்கைப் பொருட்களின் விளைநிலங்களாகவும், தங்களது பொருட்களின் மார்க்கெட்டுகளாகவும், நிலைநிறுத்துவதுதான் குஜராத்தி மார்வாடிக் கும்பலின் நோக்கம். இங்குள்ள கேரள காங்கிரசார் இந்த அக்கிரமத்திற்கு ஒத்துழைக்கிருர்கள். இங்கு தொழிற்சாலைகள் ஆரபிக்கப் படவேண்டுமாயின் மத்திய சர்க்காரின் அனுமதி வேண்டும். துவக்கப்போகும் விவசாயத்தின் வளர்ச்சி எவ்விதத்திலேனும் வடநாட்டு முதலாளிகளின் லாப வேட்டைக்கு தடையாக இருக்குமென்று தோன்றினுல் அனுமதி மறுக்கப்படும். குஜராத்தி—மார்வாடிகளின் லாபத்தைப் பொறுத்துத்தான் நமது நாட்டு முன்னேற்றமும், விவசாய வளர்ச்சியுமிருக்கிறது. நமது உரிமைகளுக்குச் சாவுமணி அடிக்கும் வடநாட்டு ஆதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்தும் நாம் விடுதலை பெற வேண்டும்.

சுதந்திரப் பஞ்சாப் வேண்டுமென்று தாராசிங் முழக்கமிடுகிருர். ஆந்திர அரசு வேண்டுமென்று பிரகாசம் கோஷ்டியார் கூறுகிருர்கள். திராவிட இயக்கத்தினர் வடநாட்டு முதலாளித்துவத்தின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துப் போராடுகிருர்கள். மத்திய பீடத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து எல்லாப் பகுதி மக்களும் அணி வகுக்கிருர்கள்"

—எம். எல். ஜார்ஜ்

'சோஷியலிஸ்ட்' மலையாளப் பத்திரிகை.

மேலே காணும் கருத்துத் தொகுப்பு கேரளத்தில் நமது கொள்கை வெற்றியைக் காட்டுகிறது. கேரளம் இன்று நமது கீதத்திற்குத் தாளம்போட ஆரம்பித்துவிட்டது. இந்த இன்னிசை சில விட்டில் வீரர்களுக்கு, விளம்பரந் தேடிகளுக்கு, விவேகமற்ற கோட்டான் குஞ்சுகளுக்கு இடி முழக்கமாயிருந்தது; இருக்கிறது. 'விட்டேனு பார்!' என வீராப்புப் பேசினர்; முணுமுணுத்தனர்; மோதிப் பார்த்தனர்; 'ஐயோ! மோசம், அருகே செல்லாதீர்!' என முகாரி பாடினர். அந்த மோகனர்களின் முகாம் இன்று மூளியாகக் காட்சியளிக்கிறது.

நமது கொள்கை தித்திக்கும் தேனாக, திகட்டாத சுவைத் தொகுப்பாகத் தோன்றுகிறது கேரளத்தவருக்கு;

"371-ம் பிரிவின் மறைவிலிருந்து கொண்டு, அக்கிரமங்களை அழிப்பதற்குப் பதிலாக, சுரண்டலும் ஆதிக்கமும் விரிவாக்கப்படுகின்றன. அக்னி மலையின் மேலே மணி மாளிகை அமைக்காதீர்கள்! அது என்றைக்காவது வெடித்துச் சிதறும். ஆட்சியாளர்களுக்கு என் எச்சரிக்கை இது. இந்த நிலை நீண்டால் "தென்னடு' சுதந்திரக்குடியரசாக மலரும்"

—அனிமஸ்கிரீன்.

* * *

"எங்களது மொழியையும்நாகரீகத்தையும்மிதித்து துவைக்கிறீர்கள். உங்களது மொழியை எங்களது தொண்டையில் சொருகுகிறீர்கள், நாங்கள்இதைத் தடுப்போம். 371ம் பிரிவிற்கு எங்களை இரையாக்கி அடிமையாக்க எவரையும் அனுமதிக்க மாட்டோம், நான் உங்களுக்கு முன்னறிவிப்புத் தருகிறேன்; தீயோடு விளையாடாதீர்கள்!

ஸ்ரீ கண்டன் நாயர்

(4—6—1952)

* * *

பாசசீசத்திற்கு எதிராக இந்த பாணங்கள் எய்யப்பட்டிருக்கின்றன. ஏழையின் குரல் இந்தப் பேச்சுக்களிலே எதிரொலிககிறது! விடுதலை விரும்பிகளின் உணர்ச்சி வாடை' வீசுகிறது. இந்தக் கருத்துக்களை தெரிவித்திருப்போர் சாமான்யர்களல்ல; கேரள அரசியல் வானிலே ஒளி சிந்தும் 'சந்திர சூரியர்கள்' திருமதி அனிமஸ்கிரீன் அவர்கள். திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரசின் துவக்கத்திலிருந்தே நாட்டு விடுதலைக்காகப் பணியாற்றுபவர்; தூய்மையின் இருப்பிடமாயிருந்த காங்கிரஸ் துரோக சிந்தனையின் விளைநிலமாக மாறியதும் அதிலிருந்து வெளியேறியவர்; கட்சி பேதமின்றி எல்லோராலும் போற்றப்படுபவர். 30—5—52ல் டெல்லிப் பாராளுமன்றத்தில் பேசியதே, அல்ல... அல்ல...எச்சரிக்கை செய்ததே மேலே தரப்பட்ட கருத்து. 'ஆணவக்காரர்களே! எரிமலையின் மேலே எழில் மாடம் எழுப்பாதீர்கள்!!' என்று அபாய அறிவிப்பு விடுத்துள்ளார்.

இரண்டாவது கருத்தின் சொந்தக்காரரானதிரு.ஸ்ரீகண்டன்நாயர் அவர்கள் புரட்சிகர சோஷியலிஸ்டுக் கட்சியின் தலைவர். மத்திய பீடத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து, பாராளுமன்றத்தில் பேசியதே இரண்டாம் கருத்து.

டில்லிக் குழந்தைகளின் விளையாட்டு மைதானத்தில் திருமதி அனிமஸ்கிரீன் அம்மையார் பேசிய பேச்சின் சில பகுதிகளை மீண்டும் நினைவு படுத்திப் பாருங்கள்.

"மத்தியபீடம் தன் சுரண்டலையும் ஆதிக்கத்தையும்

## கேரள அமைப்பு

திரு. ஜி. சில்வஸ்டர்—திருவனந்தபுரம்
(தி. மு. க. கேரள மாநில அமைப்பாளர்)

திரு. எ. அருணசலம்—பாலராமபுரம்.
(துணை அமைப்பாளர்)

திரு. அப்பாஸ்—வண்டிப்பெரியார்.
(பொருளாளர்)

திரு. வி. கே. சாமி—பாலக்காடு.
(அவைத் தலைவர்)

### செயற்குழுவினர் (மாவட்ட ரீதியாக)

திருவனந்தபுரம்:
கே. எச். எம். சுபேர்
எம். எ. மசூத்

கொல்லம்:
எஸ். கே. பாண்டியன்
வி. தருமராசன்

ஆலப்புழை:
பி. எஸ். மாத்யூ

எர்ணுகுளம்:
சி. டி. விஜயன்
எம். என். புருஷோத்தமன்
பிரபாகரன்

திருச்சூர்:
எம். வரதராசன்
கதிரவன்

பாலக்காடு:
சி. வி. சோமசுந்தரம்
கொச்சப்பன்
கே. எம். அனீபா

கோட்டயம்:
வி. கே. மாதவன்
டி. டி. சோமு
கே. எம். அப்பாஸ்
வேதமுத்து

கண்ணனூர்:
நாராயணன்

விரிவாக்குகிறது.''

"இந்த நிலை தொடர்ந்தால் தென்னுடு குடியரசாகும்.''

"தென்னுட்டவர்களை வடக்கத்தியர்கள் அலட்சியம் செய்கிருர்கள்.''

"ஆதாயம் தரும் தென்னுட்டின்மீது வடக்கு தன் ஆதிக்க வலையை விரித்துப் போடுகிறது.''

"பெரியபெரிய நிர்மாணத் திட்டங்கள் வடக்கிலேயே நிறுவப்படுகின்றன''

"ஒதுக்கி வைத்த தொகையைத் தராது வஞ்சனை புரிகிருர்கள்''

"வகைகெட்ட ஒப்பந்தங்கள் மூலம் எங்கள் நாட்டு ஏழைகளின் வாழ்வைப்பாழ்படுத்துகிருர்கள்''

நம் இலட்சியங்கள் அவரது வாயிலாக வெளிவருகின்றன. அனிமஸ்கிரீன் அம்மையார் ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டவரல்ல. தி. மு. க. அவர் தொட்டறியாத ஒன்று. நம்மில் பலருக்கு இவரது பெயர்கூடப் புதிதாக தோன்றும்.

'அகண்ட பாரத வர்ஷத்தின்' அரசியல் தலைவர்கள் குழுமியிருக்கும் திருச்சபையில் இந்தியாவின் 'இதயம்' என்று சுயராஜ்ய சுந்தரர்கள்போற்றும் டில்லியில் இத்தகைய முழக்கம் எழுப்பப்பட்டுள்ளது. மனித மாணிக்கம் ஒளி குன்றிதான் போயிருக்கும்! அவருக்கு இந்தக் குரல் புதிது! பண்டிதருக்கு கேரளத்தவர்கள் என்ருலே இப்போது கொஞ்சம் கசப்பு! "குஜராத்தியே வெளியேறு'' என்ற முழக்கத்தைக் கேட்டவுடனேயே அவருக்கு கோபம்......பிறகு ஆந்திர ஆர்ப்பரிப்பு! 'இப்படியுமா பேசுவது' என்ற ஏக்க நிலை. அனிமஸ்கிரீனின் குரல் கேட்டு அவர்கொதித்திருப்பார். புதுமையான பேச்சு, புதுமையான தொனி! கழகக் கொள்கைகள் இழையோடுகின்றன பேச்சில். முற்றிலும் மாறுபட்ட இப்பேச்சினை பண்டிதரால் பொறுத்திட முடியுமோ? ஆச்சரியக்குறிகள் கேள்விக்குறிகளாக மாறியதைக்கண்டு மிரண்டுதான் போயிருப்பார்.

நியாயத்தின் வாயைத் தைத்திருந்த பிடிப்புக்கள் விடுபடுகின்றன! நீதித்தராசின் சரிவு நேராகிறது! நேருவுக்குப் பிடிக்காமலிருக்கலாம்! என்ன செய்வது? எத்தனை நாட்கள்தான் உண்மைக்கு உறைபோட்டு வைக்க முடியும்.

நாம் எழுதி எழுதிப்பேசிப்பேசி வந்த விடயங்களை வாரிச்சுருட்டி 'கேட்டீரா? கேரளத்தாரே! என குரலெழுப்புகிறது "கௌமதி'' என்ற மலையாள நாளிதழ்.

"டாட்டாக்கள் பிர்லாக்கள் ஆகியோர்களின் இலட்சியத்தைக் காப்பாற்றுவதிலே முனைந்திருக்கிறது டில்லி''

"வடவரின் சோப்புத் தொழிலில்லாபத்தைக்குவிப்பதற்காக சிலோன் கொப்பரையின் இறக்குமதிவரியைக் குறைத்து, தென்னிந்திய தென்னங் கிருஷிக்காரர்களை நட்டாற்றில் விட்டது''

"அநேக லட்சம் மக்களின் ஜீவாதாரமான கயிறுதொழிலின் அச்சாணி உடைந்து கிடப்பதுபற்றி நிதிமந்திரி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதேபோது வட இந்திய சணல் தொழில் பற்றி நாவலிக்கப் பேசியுள்ளார்.''

"திருவிதாங்கூரின் தொழில்களான மானசைட் இல்மனைட் இவைகளின்முன்னேற்றத்தைக்கழுத்தைப் பிடித்து நெருக்குருர்கள்''

இவ்வளவும் "கௌமதி'' யின் குற்றச்சாட்டுகள் மலையாளத்தில் காங்கிரஸ் 'இதயமே' 'கௌமதி' தான்; அன்று. 'இதோடுமட்டும் நின்றுவிடவில்லை 'கௌமதி' இன்னும் மேலே போகிறது பாருங்கள்.

"பரந்து கிடக்கும் இந்தத் துணைக் கண்டத்தை ஒரு ஆட்சியின்கீழ் வைத்திருப்பின்இதுபோன்ற கொடுமைகள் நிகழும்''

"தென்னிந்தியாவின் மீது அர்த்தமற்ற ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கப்படுகிறதென்பது பார்லிமெண்ட் நடவடிக்கைகளைப் பார்த்தாலே தெரியும்''

"பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்ட இந்தியாவை இன்னும் "இந்தியா'' என்று கூறிக்கொள்வதில் அர்த்தமில்லை''

பேசுவது நாமல்ல. 'கௌமதி' திருவனந்தபுரத்திலிருந்து இந்தத் தீரக்குரலை எழுப்பியிருக்கிறது. தேசீய திருமேனிகளின் பொன்னுன கவனத்திற்கு இந்தக் கருத்தைக் காணிக்கையாக்குகிருேம். 'அர்த்தமில்லை' உடைந்துபோன குரலல்ல—உறுதி தெறிக்கக் கூறுகிறது 'கௌமதி'! எந்தக் கொள்கைகளுக்காக நாம் பாடுபடுகிருேமோ அதைக் கூறுகிறது இந்தியா என்பதில் அர்த்தமில்லை என்று. அதற்குப்பரிகாரம் வேறு கூறுகிறது.

"பழைய ஆரிய வர்த்தத்தின் தென் எல்லையானவிந்தியத்தை வைத்து ஆரிய வர்த்தமென்றும் தென்னுடு என்றும் இரண்டாகப்பிரிக்க வேண்டும்''

"சகல அதிகாரங்களுமுள்ள இரு குடியரசுகளாக இந்தியாவைப் பிரிப்பதுதான் நன்மை பயக்கும்.''

பிரிக்க வேண்டுமென்று பேசுவதோடு 'கௌமதி' நின்றுவிடவில்லை. அதற்கான திட்டமும் வகுக்கிறது.

"தென்னிந்தியாவின் தேவைகள் சரிவர நிறைவேற வேண்டுமாயின் சென்னை, மைசூர், ஹைதராபாத், திருவிதாங்கூர், கொச்சி, முதலிய பகுதிகள் இணைந்த ஒரு சுதந்திரக்குடியரசு ஏற்பட வேண்டும்.''

"காஷ்மீர் பிரச்சனையிலும், மத்தியபீடம் காண்பிக்கும் வேற்றுமையே நமது விழிகளைத் திறக்க வைக்கும்.''

இவ்வளவு கருத்துக்களும் மலையாள மக்களை ஆட்கொள்ளவில்லை என்று கூறிவிட முடியுமா? கேரளம் நமது இலட்சியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. கழகம் நீரோட்டம்போல ஓடி வளர இவை துணைபுரிகின்றன.

"பொருளாதார உடன்படிக்கைப்படி மேலிடம்நடப்பதில்லை என நாம் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத்தொடர வேண்டும்.''

ஆர். சங்கர் எம். எல். ஏ.

(திருவிதாங்கூர் சட்டசபையில் 5—4—1951)

தலைமைபீடத்தின் கெடுபிடியும் பொறுப்பற்ற தன்மையும் ஆத்திரப்பட வைத்திருக்கின்றன. பேசிய இடம் பொதுமேடையோ சந்து முனையோ அல்ல சட்டசபை! பேசியவர் செல்லாக்காசல்ல. 1951ல் சிறந்த அரசியல்வாதியாக மதிக்கப்பட்டவர், 1961ல்கேரளதுணைமுதல்அமைச்சராக இருப்பவர், வழக்குதொடர வேண்டும் என்று கூறுகிற அளவிற்கு, வடநாட்டானின் வஞ்சனையை பத்தாண்டுகளுக்கு முன்னமேயே கேரளம் உணர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இதனை எழுதினேம்.

"மத்திய அரசாங்கத்தின் ஏகாதிபத்யமும் மாகாணங்களிடமுள்ள அலட்சியமனப்பான்மையும்அதிகரிக்கிறது ஒரு தென்னிந்தியக்குடியரசு ஏற்படவேண்டுமென்றகுறிக்கோள் ஆங்காங்கே முளைத்துள்ளது. இந்தக் குறிக்கோளுக்கு ஆதரவு தருவதாக அமைந்திருக்கிறது மத்திய பீடத்தின் போக்கு''

"கேரள கௌமதி''

"சென்னையில் வடநாட்டுச் சுரண்டலை எதிர்த்து திராவிடர் இயக்கம் மகத்தான போராட்டம் நடத்தி வருகிறது. மலபாரில் பிரபல கம்யூனிஸ்டான தோழர் கோபாலன் வடநாடு தென்னுட்டைச் சுரண்டுகிறது என ஒரு அறிக்கையில் வெளியிட்டுள்ளார். இவைகளையெல்லாம் பார்த்தால் கேரளமும் அவர்களைப் பின்பற்றத்தான் வேண்டுமெனத் தோன்றுகிறது.

கேளுங்கள்? ஏக இந்தியர்களே கேளுங்கள்! கேரளத்தில் எங்களுக்கு ஆதரவில்லை என 'முதலைக் கண்ணீர்' வடிக்கும் அன்பர்களே கேளுங்கள்! கேரளம் கழகக் குரலைக் கேட்கிறதா என்று கூக்குரலிடும் தேசய சிரோன்மணிகளே கேளுங்கள்! பகுத்தறிவுக் கொள்கைகளுக்குப் பழுது கூறமுடியாமல் 'அவர்கள் ஆதரிக்கவில்லையே; இவர்கள் கேட்கவில்லையே' என மழுப்பும் ஞானக் குஞ்சுகளே கேளுங்கள். 'கேரள கௌமதி' இன்று இருந்து நாளை மறையும் ஏடல்ல, கேரளத்தின் குரல்' எனக் கருதப்படுகிறது. அந்நாளிதழ், வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது கேரளத்தவருக்கு! திராவிட இயக்கத்தவரைப் பின் பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று!

(11-ம் பக்சம் பார்க்க)


வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னே. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

# நீங்களும்

அன்புடையீர்,

தாங்கள் ஆண்டு மலர் கண்டேன். ஆனந்தம் மிகக் கொண்டேன். மலரின் மதுவை அருந்தி மட்டற்ற மகிழ்வும் கொண்டேன். இடை இடையே சிற்சில எழுத்துப் பிழைகளும் சந்திப்பிழைகளும் உள. மற்றப்படி குறை இல்லை. 'அப்பா' அவர்கள் கற்பிக்க இருக்கும் திராவிட மொழிகள் கண்எனத் தக்கனவே.

தங்கள்,
இராமசாமி,
களுமடை.

* * *

## வாழ்க தென்னவர் கோன்

அன்புடையீர்!

'அறப்போர்' கழக ஆண்டு மலரினைக் கண்டோம், சொல்லில் வடித்துதர முடியாமையால் நிலை தடுமாறுகின்றோம். எங்கள் இதயத்தின் எழுச்சியினை திராவிடத்தின் விடுதலைப்படை வரிசையில் புதியதோர் அணிவகுப்பு! அண்ணா அழைத்துச் செல்லும் பாதையில் ஏறுபோல் பீடுநடைபோட்டு வஞ்சகர்களின் விலா எலும்பை முறிக்க; வடவர் பிடியிலிருந்து விடுபட; ஆணவக்காரரின் ஆணவத்தை அடக்க; தருக்கர்களின் தலைகனத்தை தவிடு பொடியாக்க; ஆளவந்தோரின் ஆட்சியின் அலங்கோலத்தை அவனியறிய; திண்தோள் வீரர்களின் போர்வாளாக; செந்தமிழ் மொழி பேசி; தெவிட்டாத தெள்ளமுதாய்; "பன்மொழி புலவரின் இனமொழி கற்பீர் என்ற புதிய பகுதியினை தாங்கி வரப்போவதாகச் செய்திக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றோம்..

அறப்போர் என்றிட்ட
கொள்கையேடே!
திராவிட இனம் வாழ முழங்கும்
இனிய யேடே!
அண்ணா பாதை
நெறியோடு நீதியோடு
தென்னவர் கரங்களில்
தவழும் ஏடே!
நீ வாழி!

அன்பின்:
சி. துரைராசன்
மு. ரத்தினம்,
'தங்கவயல்'

* * *

ஆருயிர் அண்ணா!

அறப்போர் கழக ஆண்டு விழா மலர் மணம் மிக தந்தது. மீண்டும் மீண்டும் நுகர்ந்தேன்; எனினும் ஆவல் தீரவில்லை. அதனால் என் வேலை தடை படுகிறது. அதற்காக தங்களை அன்புடன் கேட்டுகொள்கிறேன். ஒரே ஒரு குறை. எழுத்துப்பிழை அளவிடற்கரியது. இதைக் கூறுமல் முடியவில்லை. தாங்கள் என்னையும் என்போன்ற சகோதரர்களையும் கவர்ந்தமையின் காரணமாக:

அன்புத்தம்பி,
ச. காந்தி,
தஞ்சை.

* * *

ஆசிரியர்,

இராம. அண்ணல் அவர்கட்கு வணக்கம். தி. மு. க. ஆண்டு மலரைக் கண்டேன். அறிஞர் அண்ணாவின் முகப்புத்தோற்றத்தையும் நம்முடைய குடும்பத்தையும் விடுதலை இயக்கத்திலே இறங்கிவிட்ட இராம. அரங்கண்ணல் துணைவி ஆண்டாள் உங்கள் இருவருடைய புகைப்படத்தையும் அறப்போரில் கண்டேன்.

மற்றும் தி. மு. க. ஆண்டு மலருக்குஅறப்போர் சிறப்பைத்தந்து இருக்கிறது.

அதோடு இவ்வாண்டு தி.மு.க. மலர் புத்தக வடிவிலே வெளி வந்திருக்கிறது. எனவே என் அன்னை அண்ணா பொன்னராசனும் என் இலட்சிய தம்பி செயராமனும் இம்மலரை வெகுவாக பாராட்டினார்கள்.

வாழ்க அறப்போர்! வெல்க திராவிடம்!! நீடுழி வாழ்க வாழ்க அறிஞர் அண்ணா! வெல்க, வெல்க இராம அரங்கண்ணல் 'தொண்டு'என வாழ்த்துகிறேன்.

சி. மார்டின்,
பொன்வயல்.

* * *

அறப்போர் ஆசிரியர் குழுவினர்கள், நீதியை பரப்பும் நிபுணர்களாக நிடூழிகாலம் வாழ்கவே!

அறப்போர் தி. மு. க. ஆண்டு மலர் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய பொக்கிஷம்.

17—9—61 அன்றே உங்களுடைய கையில் கிடைக்குமென்று முரசொலியில் விளம்பரம் தந்துவிட்டு அருகில் உள்ள செங்கற்பட்டில் தியாகராசனிடம் 21—9—61ல் கிடைத்தே அதை நினைக்கும்போதுஇன்னும்எங்களை ஏங்க வைக்காமல் 22—9—61ல் கிடைக்கும்படி செய்த ராதா கிருஷ்ணா அண்ட்கோவுக்கு என்னுடைய ஆசி. இதனால்தான் என்னிடம் கஜானா இல்லையென்று மாநாடு மலரில் குறிப்பிட்டீர்களோ தாங்கள் எழுதியுள்ள நன்றியை படிக்கும்பொழுது கோபமெல்லாம் பறந்துவிட்டதே.

ஸ்டாலின் தந்தை எழுதியுள்ள இலட்சியவீரன் அண்ணாமலை யூனிவர்சிடி தந்த அறிவுச்சுடரின் விலகாத விரல்கள் பரிமளம் அப்பா எழுதியுள்ள காலம் மாறுது. மற்றும் பிரமுகர்களின் கட்டுரைகளும் சிறப்பாகவேயுள்ளன. எங்கள் அண்ணனுக்கு பெருமையை தேடித்தரும்ஜீவன். ஜெயா, சாமுவேல், மற்றும் நண்பர்களுக்கும் நன்றி கலந்த வணக்கம்.

குறையே இல்லாத மலர் மணம் தருகிறது.

அறப்போர் 'வாசகன்,
கே. பி. மொஹிதின்.
செங்கல்பட்டு மாவட்டம்.

* * *

## என் கருத்து

அன்புடைய 'அறப்போர்'ஆசிரியர் அவர்களுக்கு எனது அன்புநிறை வணக்கம் உரியதாகட்டும்.

தங்கள் 'அறப்போர்' ஆண்டு மலர் கிடைத்தது. பிரித்துப் பார்த்தேன். இலக்கியச் சோலையிலே பூத்துக் குலுங்கும் எண்ணற்ற நறுமலர்களில் இதுவும் ஒன்று. ஆனால் அவற்றில் பொறுக்கி எடுக்க வேண்டுமென்று எண்ணினால் நிச்சயம் இதுவும் ஒன்ருகவே திகழும் என்பதில் ஐயமில்லை?

"அண்ணா வாழ்க! திருவிடம் வருக!! என்ற தலையங்கம் மிகவும் அருமை.

'காலம்மாறுது'என்ற அண்ணாவின் கட்டுரை காலத்திற்கேற்ற கருத்தைக் கூட்டிமக்களைசிந்திக்கச் செய்து சிரிப்பையும் உண்டாக்கி விட்டது.

"ஒழிக கசப்பு" என்ற என். வி. என். அவர்களின் எழுச்சிக் குரல் வருங்கால சமுதாயத்திற்கு ஓர் "அன்பழைப்பு" என்ருல் மிகையாகாது!

'இலட்சிய வீரன்' என்ற மு. க.வின் படைப்பு நமது முன்னணித் தோழர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. "அந்த ஊர்வலம்" என்ற கே. ஏ. மதி தீட்டியதைப் பார்த்தால் நம் கண்முன் "குன்றின் மேலிட்ட தீபம்" போல் காட்சியளிக்கிறது.

ஆம்! "விலகாத விரல்கள்" இரா. நெ. எழுதிய வியாசம், நமக்குறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்ற முப்பொருளையும் வைத்துப் பின்னப்பட்ட சொற்சித்திரம்: க. அ. வரைந்த "சட்டமன்றத்தில் நாம்!"! என்ற விளக்கஉரை இன்றைய ஆட்சியாளருக்கு நல்ல அறிவுரை.

திராவிட மொழியின் மூல மொழியான தமிழின் ஓசை நயம் பொருள், உருவம் இவைகள் எங்கெந்த மொழிகளில் பரவிக் கிடக்கிறதென்பதை அறிய ஆராய்ச்சியின் மூலம தெளிவாக்குகிருர் பேராசிரியர் க. அப்பாதுரையார்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கேரளம் நம்மை 'இவர்கள் யாரோ'? என்று சந்தேகக் கண்களோடு பார்த்த காலம் சென்று விட்டது. கேரளத்தவர்கள் இன்று நம்மை அறிய நமது கொள்கைகளை உணர அணுகியிருக்கின்றனர்.

கேரளம் பிரிய வேண்டும் என்ற எண்ணமும், அதோடு தமிழகம்; ஆந்திரம், கன்னடம் ஆகியவையும் பிரிய வேண்டும் ஒன்ற எண்ணமும் கேரள மண்ணில் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

கேரள மண்ணில் 'திராவிட முன்னேற்றக் கழகம்' மேற்காட்டியுள்ள ஆதரவுக் குரல்களைக் கொண்டும், கழகத்தவரின் உயரிய பணியினைக் கொண்டும் வளர்கிறது, வளர்கிறது, வளர்கிறது.

—0—ஃ—0—

என் தாய் சத்தியவாணிமுத்து அம்மையார் "தாய்க் குலமே விழி" என்று அறைகூவி யழைக்கிருர் சமுதாயத்தின் நற்பணிக்கு ஏனைய பெண்கள்திலகங்களை!

கலைதாசன் எழுதிய "கல்லறையைக் காணும்போதுஅண்ணாவின் காலத்திலேயே நம்நாடு விடுதலை பெற வேண்டுமென என் இதயம் இனிய நாதத்தை எழுப்புகிறது. "திரும்பிப்பார்" —"கண்டேன்" — "இன்பம்" "பரவட்டும் நம் கொள்கை" முதலிய கவிதைகள் நல்ல பொருள் செறிந்தவை. மலரைத் தந்த ஆசிரியருக்கும் "நன்றி" நாம் சொல்லு முன் அவரே இறுதியில் சொல்லி விட்டதால் நாம் அன்னாரின் சேவை 'அறப்போர்' மூலம் பல்லாண்டு பாரில் பவனி வர வாழ்த்துகின்றேன்.

மலர்க தமிழகம், வளர்க திராவிடம்.

ஏ. எம. ஏ. காசிம். கீழக்கரை.

* * *

அன்பு சகோதரர் அரங்கண்ணல் அவர்கட்கு எஸ். ஏ. ஜி. ராபியின் வணக்கம். நலம் நலமே விழைகின்றேன்.

தங்கள் 'அறப்போர்' கழக ஆண்டுமலர் கண்டேன்—புதுப் புதுக் க்ருத்துக்களை கொண்ட மலர் படிக்கப் படிக்க சுவை மிக்கதாக இருந்ததோடு—சிந்தனையைக் கிளறி நல்ல முறையில்செயல்படுவதற்கு ஊக்கத்தை அளிப்பதாகவும்-அமைந்திருந்ததைக்கண்டு அக மகிழ்ந்தேன். மேலும் இதைப்போல பல மலர்களை எங்களுக்கு அளிக்க வேண்டுமென விரும்புவதுடன் தாங்கள். எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் நல்ல வெற்றியைத்தரும்—என மனமார பாராட்டுகிறேன்.

சகோதரன்,
எஸ். ஏ. ஜி. ராபி,
திருச்சி.

# நானும்

# கேள்வி பதில்

கேள்வி: சம்பத் கட்சி நடத்திய மாநாட்டில் ம. பொ. சி. ஆதித்தன் ஆகியோர் ஏன் அழைக்கப்படவில்லை.

க. பெ. ராசன்
காரிமங்கலம்

ப: துதிபாடாமல், "சதி இது! மதியுள்ளோர் விரும்பமாட்டார்கள்!!" என்றுஅவர்கள் ஏதாவது பேசிவிட்டால் என்ன செய்வது?

* * *

யைச் சற்றுச் சுருக்கித் தருக.

சா. கோவிந்தசாமி
ஆலூர் (தஞ்சை)

ப: மார்க்சீய தத்துவப்படியே எதுவும் நடக்கும் என்பது அவர்கள் வாதம். மார்க்ஸ் அவர்களை வணக்கத்துக்குரிய பெரியார் என்று நாம் கொண்டாலும் காலமாறுதலையொட்டி கருத்தும் மாறுதலும் ஏற்படும் என்பது நம் எண்ணம்.

முதலாளி — தொழிலாளி, இருவருக்கிடையிலும் அடிக்கடிமோதுதல்கள்உண்டாக்கப் பட்டுக்கொண்டேயிருந்துகடைசியில் பெரிய தொருமோதுதல் ஏற்பட்டு புரட்சி வெற்றி பெற வேண்டும் — என்பது அவர்கள் போக்கு. இதே புரட்சி அன்பு வழியாலும் உண்டாக்க இயலும் என்பது நம் எண்ணம். இதனாலேயே நாம் ஜனநாயக வழிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

களை நாம் வெளியிடாமலுமில்லை. வெளிநாட்டோடு நம் நாட்டு நிலைமைகளை ஒப்பிட்டு, மிக அதிகம் பிரச்சாரம் செய்த கட்சி தி. மு. க. வாகவேயிருக்கக்கூடும்.

(3) நேரு மனம் வைததால் அவர் காலத்திலேயே கிடைக்கும்! அவருக்குப் பிறகு தன்னாலேயே 'இந்தியா' பலவாகும்!

(4) ஏதோ ஒருபெயரில் ஒவ்வொரு வல்லரசும் தன்னாதிக்கத்தை நிலைநாட்ட விரும்புகிறது. சுருக்கமாகச் சொன்னால் அன்புவழிமறந்து சுயநல வழியே ஆட்டம் போடுகிறது;

* * *

கேள்: 14—9—61ல் விருத்தாசலத்தில் நடைபெற்ற விவசாயிகள் சங்க அறப்போர் ஆதரவு பொதுக்கூட்டத்தில் தோழர் எம். செல்வராசு எம்.

பெற எதையும் செய்வேன் பொறுத்திருங்கள்.

கே: ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தரஉறுப்பினர்கள் யார்? ஒரு பிடிக்காத முடிவு பெரும்பான்மையாக நிறைவேற்றப்படின் அவர்கள் என்ன செய்கிறார்கள்? அது போன்றசமயங்களில் பொதுச் சபை தலையிட முடியுமா?

பார்த்தசாரதி,
பச்சையப்பன கல்லூரி

ப: பாதுகாப்பு சபையின் நிரந்தர மெம்பர்கள் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, பார்மோசாவிலிருக்கும் சியாங்கேஷேக்கின் சீன முதலியவைகளாகும். மெஜாரிடியாக ஒரு தீர்மாணம் நிறைவேற்றப்பட்டாலும் ஒரு நாட்டுக்குப் பிடிக்கவில்லையென்றாலும் ரத்து செய்யக்கூடிய 'விடோ' என்கிற அதிகாரம் இவைகளுக்குண்டு. தனனிடம் வராத எந்தப் பிரச்னையிலும் ஐ. நா. பொதுச்சபை தலையிடாதுமிக முக்கியமான பிரச்சினைஎன்றால் பொதுசபைஅவசரமாகக்கூடும். பாதுகாப்புச் சபையில் மேற்கத்திய வல்லரசுகள் அதிகமாகயிருப்பதால் அவைகளின் முடிவை, அடிக்கடி ரஷ்யா 'விடோ' செய்துவிடுகின்றது. சூயஸ்கால்வாய் பிரச்னை வந்தபோது, பிரான்சும் பிரிட்டனும் சேர்ந்து பாதுகாப்பு சபையின் முடிவை 'விடோ' செய்தன. உடன் பொதுச்சபைக் கூட்டப்பட்டு சூயஸ் பிரச்னை விவாதிககப்பட்டது.

கே: வைத்துக்கொண்டு எழுதுகிறோமே பேனா! அதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யாரண்ணா?

மு. து. சுப்பையா முதுகளத்தூர்

ப: வாடர் மேன்.

கே: ஆங்கில மொழியில் எத்தனை வார்த்தைகள் மொத்தம் உள்ளன? அதிகமான வார்த்தைகளை உபயோகித்த ஆங்கிலக் கவிஞர் யார்?

அரி. இராசரத்னம்,
அரிமழம்,

ப: ஆங்கில மொழியில் மொத்தம் மூன்று லட்சம் வார்த்தைகளிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு படித்த ஆங்கிலேயர் 3000லிருந்து 4000 வார்த்தைகள் வரை பயன்படுத்துகிறார், கவிமில்டன் 8000 வாரர்த்தைகளைப்பயன்படுத்தி யிருக்கிறார். அதிகம் உபயோகித்தவர் ஷேக்ஸ்பியர்தான்! அவர் மொத்தம் 1500 வார்த்தைகளை, தமது கவிதை நாடகங்களில் எடுத்தாண்டிருக்கிறார்.

## விவசாயிகள் அறப்போரில் தி. மு. க. பங்கு என்ன?

கே: த. தே. க. மாநாட்டில் ரூ 35000 மிச்சம் என்று வெளியிட்டிருக்கிறார்களே! அதில் நம்மிடமிருந்து கொண்டுபோன தொகையும் சேர்ந்ததா?

கி. வீ. வேணுகோபால்,
சிதம்பரம்

ப: தெரியவில்லை! ஆனால் அவர் மாநாட்டுக்கு எப்படியெப்படி நிதிகள் திரட்டினார்கள், யார் யாரிடம் சென்று நன்கொடை கேட்டார்கள் என்கிற தகவல் களைக்கேட்டால் அய்யாவின் 'பாலிசியை' அப்படியே சம்பத்தும் பின்பற்றுகிறார் என்றே தெரிகிறது!!

* * *

கேள்: (1) பொதுவுடைமைக் கட்சியினரின்பொதுவுடைமை கொள்கைக்குதிமு. கழகத்தின் பொதுவுடைமைக்கும் வேறுபாடு உண்டெனின் தயவு செய்து விளக்குங்கள்.

(2) தி. மு. கழகம் அவ்வப்பொழுது ஏன் வெளிநாட்டுக் கொள்கைபற்றிய கருத்துக்களை வெளியிடுவதில்லை?

(3) நேருவுக்குப் பிறகு திராவிடநாட்டை அடைய இயலுமென நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?

(4) உலகத்தின் தற்போதைய பொதுவான நிலை

நாடு எவ்வளவு பெரிதாயிருந்தாலும் பரவாயில்லை; ரஷ்யாயில்லையா, அதைப் போல எவ்வளவு பெரிய தேசமாயிருந்தாலும் பொதுவுடமை மலர்ந்தால் "எல்லாம் ஒன்றுதானே'! என்பது அவர்கள்வாதம்! அப்படிப் பார்த்தால் ஏன் ரஷ்யாவும் சீனாவும் இருவேறு தேசங்களா யிருக்க வேண்டும்—அருகிலிருக்கும் யூகோஸ்லோவேக்யாவும் ஹங்கேரியும் ஏன் ரஷ்யாவோடு இணைக்கப்பட்டு 'பெரிய ரஷ்யா'வாயிருக்கக் கூடாது? அது முடியாது! அதேபோல இந்தியாவும் ஒரே நாடாக யிருக்கும்வரையில் சர்வாதிகார முறையில் பொதுவுடைமை நிறுவப்பட்டாலும் மேலும் பல பிரச்னைகள் தொடர்ந்து மூலதார வெற்றியை நிச்சயம் நாசமாக்கும்! —இது நம் எண்ணம்.

இப்படிப் பல! இதற்கு தனி கட்டுரையே எழுத வேண்டும்.

(2) வெளிநாடுகள் பற்றி மாஸ்கோ ஒரு கருத்தைச் சொன்னால் அதை உடனே ஒலிபரப்ப வேண்டிய அவசியம் இங்குள்ள கம்யூனிஸ்டுகளுக்கு வருகிறது! அதனால் ரஷ்யாவின் கொள்கைக்கு உடனே வாதாடக் கிளம்பி விடுகிறார்கள். அப்படியல்ல, நாம்! அதற்காக வெளிநாட்டுக்கொள்கைபற்றியகருத்துக்

எல். ஏ. அவர்களும் கலந்து கொண்டு சர்வ கட்சியினரும் ஆதரிக்கலாம் எனவும் கூறினார். எனவே தமிழ்நாட்டில் 15—9—61லிருந்து நடைபெறும் விவசாயிகளின் சாத்வீக அறப்போரில் (விவசாய சங்கம் நடத்துவது) தி. மு. க.

## "த. தே. க. மாநாட்டில் ஏது அவ்வளவு மிச்சம்?

வினர் கலந்து கொள்ளலாமா?

வீ. சபாபதி
தொளார்

ப: கலந்து கொள்ளலாம்; இப்போதே பல இடங்களில் நம் தோழர்கள் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள்.

கேள்: அறப்போரில் மக்களுக்குப் புரியும்படியான மாணவர்கள் நடித்துக்காட்டும்படியான ஒரு நாடகத்தை எழுதி வெளியீடுவீர்களா?

வ. மாரிமுத்து,
கோடிமங்கலம்

ப: விரைவில் முயல்கிறேன்! 'கோட்டா'வும்அச்சகவசதியும் ஏற்பட்டு விட்டால் இன்னும் பக்கங்களைக்கூட அதிகரிக்கலாமென இருக்கிறேன். எனக்கு இலாபம் வராவிட்டாலும் நல்ல பத்திரிகையொன்று நடத்துகிறோம் என்கிற திருப்தியைப்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6